ஆகஸ்டு 1969

30 காசு

மகளிர் சிறப்பிதழ்



www.thamizham.net - Free E Books No TM 14718

VGP

இந்தியாவிலேயே
மிக அதிகமான ரேடியோக்கள்
விற்பனை செய்பவர்கள்



murphy

Delights the home!

V. G. பன்னீர்தாஸ் & கோ.
சைதாப் பேட்டை, சென்னை-15.
போன் : 442333—442334

கிளை :

தி. நகர். சென்னை-17.
போன் : 440246

www.thamizham.net - Free E Books No TM 14718

## மாணவர்களே!

தரத்தில் உயர்ந்த விலை சகாயமான,
சரளமாக எழுதக் கூடிய

## ஆஸ்வால்

பவுண்டன் பேனாக்கள், பால் பாயின்ட் பேனாக்கள்,
ரீஃபில்களையே வாங்குங்கள். இவை ஈடு இணை
யற்றவை. ரஜுலால் சேர்ந்த ஆஸ்வால்
இங்கையும் வாங்குங்கள்.

## ஆஸ்வால் பென் கம்பெனி

331-333, தம்பு செட்டி தெரு, சென்னை-1


www.thamizham.net - Free E Books No TM 14718

மாணவர் உலகில் ஒரு புதிய முயற்சி!

பத்திரிகை உலகில் ஒரு புதிய புரட்சி!

# பூச்செண்டு

தமிழக அளவில் ஆக்கப் பணிகள் செய்யத்துடிக்கும் மாணவர்களால் மாணவர்களுக்காக நடத்தப்படும் ஒரே இலட்சியத் திங்களிதழ்

- நீங்கள் இதுவரை படித்தே இராத செய்திகள்!
- உங்களை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் சிந்தனை முழக்கங்கள்!
- நெஞ்சினிக்கும் கதைகள்! சொல்லினிக்கும் கட்டுரைகள்!
- புதுமையான பேட்டிகள்! நெஞ்சையள்ளும் கவிதைகள்!
- உங்கள் கேள்விகளுக்கு மூன்று பேரின் பதில்கள் இப்படிப்பல! இன்னும் பல!

—எல்லாம் மாணவர்களின் முயற்சி தான்!

ஆண்டு சந்தா ரூபாய் நான்கு அனுப்புங்கள். உங்கள் இல்லம் தேடி "பூச்செண்டு" மணம் வீசும்

முகவரி : பூச்செண்டு, 19, நௌரோசி வீதி சென்னை-81

www.thamizham.net - Free E Books No TM 14718

# எங்கே விடுதலை?

இருபத்திரண்டு ஆண்டுகள்! இது நாம் விடுதலையான பின்னர் கடந்து வந்துள்ள ஆண்டுகள். விடுதலை பெற்றதும் நாட்டிலே ‘பாலாறும் தேனாறும் பாயும்’ என்று கூவினார்கள். பெண்ணினத்திற்கு விடுதலை என்றார்கள். சரிநிகர் சமமென்றார்கள். பேச்சு மிகவும் இனித்தது. இப்பொழுது கால வெள்ளத்தில் அதற்குப் பிறகு இருபத்திரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. இவ்வளவு காலத்தில் நாம் எந்த அளவு விடுதலை கண்டிருக்கிறோம் என்று ஒரு கணம் சிந்திக்கும் போது பெரும் ஏமாற்றமடைய வேண்டியிருக்கிறது. இருபத்திரண்டு ஆண்டுகளில் விடுதலை, பேச்சில் பேசியே தேய்ந்தது தான் மிச்சம்! பெண் இனத்திற்கு விடுதலையா? முழுமையாக நாம் எங்கே விடுதலை கண்டிருக்கிறோம்? அடிப்படையிலிருந்து விடுபட்டு நாகரிகப் பிடிப்பிலே விழுவது தான் விடுதலையா? பசியிலிருந்தாவது விடுதலையா? தமிழ் நாட்டின் அடுக்கு மாளிகைகளுக்கு அருகே உள்ள அரைப் பட்டினி உருவங்களைப் பார்க்கும் போது கண்ணீர் வருகிறதே!

பேச்சுக்கு விடுதலையா ? பொய்யைத் திணித்து புறம் கூறிப் பேசும் அரசியல் பேச்சுக்குப் பெயர் பேச்சு விடுதலையா? தொழில் முன்னேற்றமடைய கல்வித் தரம் உயர, விடுதலை உதவியுள்ளதா? கண்மூடிப் பிதற்றி எங்கு செல்வதென்றே தெரியாமல் விழிக்கும் நிலைக்கு பெயர் தான் விடுதலையா?

சிந்திப்போம்!

உண்மையான சுதந்திரம் பொதுமக்களுக்கு, மகளிர்க்கு, உயர்ந்தோர்க்கு, படித்தவர்க்கு, விஞ்ஞானிகளுக்கு வரும் வரை விளையாட்டுப் பொம்மைதான் நாம் பெற்ற விடுதலை!

முழு விடுதலை பெற்ற புதிய நாட்டையும் புதிய சமுதாயத்தையும்படைக்க இளைஞர் உலகு என்ன செய்யப்போகிறது?

www.thamizham.net - Free E Books No TM 14718

VISWANATH & CO.,

BOOK—SELLERS

31, Ranganathan St, T. Nagar, Madras-17 Phone : 440278

SERVING

MAN'S NEED FOR KNOWLEDGE,

We Stock and sell books,

on all subjects

COLLEGE & TECHNICAL

CONTACT.

N. B : Mofussil orders accompanied by advance of 25% attended to promptly.

மகளிர் எழுதும் விமரிசனம் :

# மகனே நீ வாழ்க!

செல்வம் என்ற கெட்ட மகனைப் பிரிந்த தாய். அவனைப்போல உருவம் கொண்ட மாணிக்கத்தை தன் மகன் என்று நினைத்து வாழ்கிறாள். செல்வத்தின் பல பழிகள் மாணிக்கத்தை அடைகின்றன. பலகுழப்பங்கள் ஏற்படுகிறது. இதனால் மாணிக்கத்தின் உண்மைக் காதல் பாதிக்கப்படுகிறது. முடிவில் செல்வம் செய்த கொலை சம்பந்தமாக மாணிக்கம் கைது செய்யப்படுகிறான். இறுதியில் செல்வம் அவ்விடம் வந்து குழப்பத்தைத் தீர்க்கிறான்.

ஜெயசங்கருக்கு இரட்டை வேடம்? வழக்கம் போல டிஷ்—டிஷ் சண்டை, கதவுகள் கையோடு வருகின்றன. மாஜிக்கா? ஆரம்பத்தில் லஷ்மி சுட்டிப் பெண்ணாக வந்து இயற்கையாக நடிக்கிறார். ஆனால் சேலையை மறந்தது ஏனோ? ஆணா பெண்ணா என்று என்று தெரியவில்லை. மாதர் சங்க ஆண்டு விழாவுக்கு சச்சா ஆடும் டான்ஸ்...?

விஜயகுமாரி ஏதாவது பார்ட் வேண்டுமென்று கட்டாயப் படுத்தி இருப்பாரோ? பாட்டுக்கள்-நினைவில் இல்லை-இப்படத்தைப் பார்க்காத மகனை அவனது தாய் "மகனே நீ வாழ்க" என்று வாழ்த்தலாம்.

எழுதியவர் : "கல்பனா"
எஸ்.ஐ.இ.டி. கல்லூரி

www.thamizham.net - Free E Books No TM 14718

# அட்டையில் உள்ள பெண்கள் யார்?



இராஜலட்சுமி　　　　　　　　　　வசந்தா

இருவரும் நடனக்கலையில் தேர்ச்சி பெற்றக் கல்லூரி மாணவிகள்.

செல்வி. இராஜலட்சுமி சொல்கிறார்: எனக்கு 5 வயதிருக்கும் போதே குற்றாலம் திரு. கணேசபிள்ளையிடம் நடனப்பயிற்சி பெற ஆரம்பித்தேன். என்து அரங்கேற்றம் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர். பக்தவச்சலம் அவர்கள் தலைமையில் திரு அண்ணாதுரை அவர்கள் முன்னிலையிலும் உலகப் பொருட்காட்சி, இன்னும் பல சிறப்பு நிகழ்ச்சிகளிலும் நடனமாடியுள்ளேன். இன்னும் இப்பழங்கலையில் தேர்ச்சி பெற வேண்டுமென்பது என் அவா''

அடுத்துள்ள செல்வி டி. வசந்தா இன்று பரதநாட்டியக் கலையை. முறையாக கற்றது திரு. கே. என். தண்டாயுதபாணி பிள்ளை அவர்களிடம் 1964-ல் நடந்த சிறப்பு அரங்கேற்றத்திற்குட்பின் சில நாடகங்களில் நடனமாடி சிறப்புப் பெற்றுள்ளார்.

இருவரும் சென்னை ஸ்டெல்லா மாரீசு கல்லூரியில் புகுமுக வகுப்பு யடிக்கிறார்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14718

**கேள்வி-பதில் :**

# மகளிரே பதிலளிக்கின்றனர் !

பதிலளிப்போர்: (i) செல்வி. ஆனந்தி, (ii) செல்வி. பி. வி. அருணா. (iii) செல்வி. கருப்பாயி (செயற்குழு உறுப்பினர்கள்)

சேலம். இல.பிரசன்னவெங்கடேசன்

1. நீங்கள் வரவேற்பது பழமையா? புதுமையா? பழமையோடு கலந்த புதுமையா?

✻ பழமையோடு கலந்த புதுமை!

✻ பழமையென்பதால் அனைத்தையும் விலக்கவும் முடியாது. புதுமை என்பதால் அனைத்தையும் ஏற்கவும் முடியாது.

✻ பழமையோடு இழையோடிய புதுமை.

காரைக்கால் P. பாலகிருஷ்ணன்

2. வாழ்க்கையில் துன்பம் எப்போது தொடர்கிறது?

✻ இல்வாழ்க்கையில் நுழையும் போது.

✻ துன்பத்தைக் கண்டு பயப்படும் போது.

✻ எதிர்பாரா ஏமாற்றம் உள்ளத்தைத் தழுவும் போது.

பெரியகுளம், ஹனிஃபா

3. 'பீட்டில்ஸ்' களைப்பற்றிய உங்களுடைய சுருக்கமான கருத்து?

✻ பேய்களை நேரில் காணாதவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

✻ சுருக்கமான கருத்துதானே; நல்ல பாடகர்கள்.

✻ இசைக்கு இனிமை கூட்டுவோராக இருக்குமோ என்று எண்ணுகிறேன்.

இராஜபாளையம் R. மல்லிகா

4. இந்தியாவிலிருந்து நிலவுக்குப் போகும் முதல் நபராக நீங்களிருந்தால் என்ன செய்வீர்கள்?

○ போகும் போது உங்கள் ஆசியைப் பெற்றுக்கொண்டு செல்வேன். அப்படியே பூச்செண்டை அங்கு போட்டு விட்டு வருவேன்.

○ சந்தோஷப் படுவேன்.

◉ அங்கு உணவுப் பொருட்கள் கிடைக்குமா என்று பார்ப்பேன்.

---

இராஜபாளையம் R. மஞ்சுளா

5. இது சிறந்த கேள்வி. பரிசு: 'ஜீவபூமி' (சாண்டில்யன்)

நாம் வேண்டாத போது தேடி ஓடி வரும் பணம், நாம் தேடிச் செல்லும் போது நம்மைக் கண்டு ஓடுவது ஏன்?

---

○ லாட்டரி சீட்டைப் பற்றி கேட்பதென்றால் நேராகவேகேட்கலாமே!

◉ நம்மைக் கண்டு பயப்படுகிறதோ என்னவோ?

www.thamizham.net - Free E Books No TM 14718

● செல்(ே)வ(ா)ம் என்ற தன் பெயரை மெய்ப்பிக்க,

சேரன் மாதேவி, செ. அமரன்

6. வருங்கால மாணவர்களைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

○ இப்போது சென்னையில் இருக்கும் ஒரு சில மாணவர்களின் நிலைமையைப் பார்த்தால் சென்னை நகரம் ஒரு நரகமாகி விடும் என்று தோன்றுகிறது.

● மாணவர்களைப் பற்றி மாணவிகளிடம் கோட்டல் ?

● "மாணவர்கள்" (மாண்புடையவர்கள்) எனத் தம் பெயரைக் காப்பார்களா என்று அஞ்சுகிறேன்.

நாகப்பட்டினம். வே. ஜெயராமன்

7. காமராஜருக்குத் திடீரென்று கல்யாண ஆசை ஏற்பட்டால்?

○ பெண்ணைத் தேட வேண்டிய பொறுப்பு நிச்சயமாக உங்களுக்கு இல்லை.

● ஆசை யாரைத் தான் விட்டது. இவ்வளவு அக்கறையாக வினவும் உம்மிடம் பெண் தயாராய் இருக்கிறதா என்ன?

● சீர்வரிசை கேட்டுக் கழுத்தறுக்க மாட்டார்.

சூளை, எம். ஆர். பிரேமா

8. மதருஸ் யூனிவர் சிட்டியில் என்ன நடக்கிறது?

○ பப்ளிக் சிட்டியில் நடப்பதைவிட அதிகமாக நடக்கிறது.

○ அட! வகுப்புக்களைத் தவிர வேறென்ன நடக்க வேண்டும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?

○ கல்லூரி நடக்கிறது.

சென்னை-7 சம்பு

9. டெலிவிஷன் செட்டை இயக்குவது எப்படி?

● டெலிவிஷன் கொண்டு வாருங்கள் இயக்கிக் காட்டுகிறேன்.

● எனக்கே தெரியாத ஒன்றை என்னிடமே கேட்டால் எப்படி பதில் சொல்வது.

● தமிழகத்துக்கு வந்ததும் பார்த்துச் சொல்கிறேன். பொறுங்கள்.

மதுரை, சிவ. சூரியன்

10 மாசற்ற வாழ்வுக்கு நற்றம் போதுமா?

○ ஓரளவு போதும்!

○ நிச்சயமாய் போதாது. மனத் தூய்மையும் வேண்டும்,

○ மாசற்ற வாழ்வுக்கு நல்லறமும், நற்றிறமும் வேண்டு.

சென்னை, இரா. கிருட்டினன்.

11. 'சைகாலஜி' என்கிறார்களே அது என்ன?

○ இதைப் படிக்கும் போது "ஓ! இந்தப் பெண் எவ்வளவு அழகாகப் பதில் அளித்துள்ளார்" என்று நீங்கள் நினைப்பீர்கள் — இதுவே சைகாலஜீ

✻ செய்கை–மனம்-வாக்கு - இவற்றின் மூலம் உண்டாகும் பிரதிபலிப்பினை அறிந்து கொள்வதே 'சைகாலஜி' (மனோதத்துவம்)

● அது 'Shy-Cology' அல்ல என்பேன் நான்.

---

குறிப்பு: ஒவ்வொரு இதழிலும் சிறந்த கேள்விக்கு.

பரிசு: அம்மாத 'ராணிமுத்து' (விலை ரூ. 1)

மகளிர் இதழிற்கு அதிகமானகேள்விகள் வந்துள்ளதால், தொடர்ந்து அடுத்த மாதமும் மகளிரே பதிலளிப்பார்கள்.

*

www.thamizham.net - Free E Books No TM 14718

# சிற்றில்லம் வாராயோ!



மூத்தவளாய் நின்றென்னை மொய்ம் புறச் சீராட்டிக்
காத்தவளே! என் அக்கா! காலமெல்லாம் எண்ணத்தால்

வாடப் பிரிந்து வான் நோக்கிப் போயினையோ ?
கூடப் பிறந்து கூட்டுப்பால் உண்டிருந்த

தம்பி முகம் பார்க்கத் தமக்கை மறப்பதுவோ?
அம்புலி வாழ்க்கை அக்கா நீ இல்லாமல்

குத்துகின்ற முள்ளாகும்! கொடிய நெருப்பாகும்.
சித்தம் கலங்கிச் சீரழியும் முன்னால் நீ

புத்தம் புது சிரிப்பும் பூக்கும் திருமுகத்தைச்
சற்றேனும் எந்தன் சல்லடைக் கண்களுக்குக்

காட்டுவதற்குப் புவிமேல் கால் வைத்து மீளாயோ?
ஈட்டுவதற்கு அரிய இதயத்து மாமணியே!

அங்கத்தின் குருதி அணுவின் அணுப் பொருளே!
எங்கே நீ போய் விட்டாய்? என்றுந் திரும்பாயோ?

முற்றத்து வாயிலிலே முகம் பார்த்து நிற்கின்றேன்.
சிற்றில்லம் வாராயோ? சென்றவளே மீளாயோ?

* தமக்கை ரீடாவின் நினைவாக.

—AVT.—


www.thamizham.net - Free E Books No TM 14718

ஒரு சிறப்புப் பேட்டி:

# மாணவர்களைப்பற்றி மாணவிகளிடம்...

# மாணவிகளைப்பற்றி மாணவர்களிடம்...

## ஒருவன் செய்த தவறால் மாணவர் சமுதாயம் என்ன செய்யும்?



மாணவிகள் எங்கு செல்லும் போதும் மற்றவர்கள் கூறியதை இழிவாகவும் பழித்தும் அவ்வப் போது குறை கூறுவதையும் தம் தலையான கடமை என நினைத்துக் கொண்டுள்ளனர். மேலும் அவர்களின் சிக்கன உடைகளால் சிலரால் ஆபாசமாக பார்க்கவும் பலரால் இழிவாக பேசவும் படுகின்றனர். ஒருவன் கேலி செய்தான் என்று கூறாமல் மாணவர்கள் கேலி செய்கின்றனர் என கூறி விடுகிறார்கள். மாணவிகள் தத்தம் கடமையை செவ்வனே செய்து யாரையும் பழிக்காமலோ குறை கூறாமலோ சென்றால் யார்தான் அவர்களை என்ன செய்ய முடியும்? இவ்வாறு இருந்தும் எவனாவது ஒருவன் சகோதரி பாசம் அற்றவனாய் கேலி செய்தால் அவன் ஒருவன் மேலுள்ள பழியை மாணவர் சமுதாயத்தின் மேல் போடாமல் எல்லோரும் ஓர் குலம் ஓர் சமுதாயம் என்பதை நிலைநாட்ட விழைய வேண்டும்.

—திரு. சுப்பாராவ், I B. Com.
கிறித்துவக் கல்லூரி, சென்னை.

❖

## பிறர் மனம் நோக நடப்பது ஏன்?

சாதாரணமாக மாணவர்களே மாணவிகளை விட திறமையும் அறிவும் கொண்டவர்கள். தங்களுடைய திறமையையும் ஆற்றலையும் மேலும் வளர்க்கவே அவர்கள் கல்லூரிக்குச் செல்கிறார்கள் என்பதனை மறந்து உல்லாசப்பொழுது போக்கவே செல்வதாகக் கொள்கின்றனர். ஒரு சிலரே சீட்டியடித்துக் கொண்டும் சேலையைக் கண்டால் வாலையாட்டிக் கொண்டும் செல்கிறார்கள். கல்லூரி மாணவர்கள் சற்று உல்லாசமாகவும் மகிழ்வுடனும் தான் இருப்பார்கள். ஆனால் அளவுக்கு மீறி எதனையும் கொள்ளக் கூடாது. மாணவிகள் பஸ் நிலையத்தில் நிற்கும் போது பஸ்களில் செல்லும் மாணவர்களில் பலர் ஏறும் வழியில் நின்று சீட்டியடிப்பதால் அவர்களுக்கு என்ன மகிழ்ச்சி? பிறர்மனம் நோகநடப்பது

www.thamizham.net - Free E Books No TM 14718

ஏன்? கலாட்டா செய்யாத மாணவர்களை நண்பர்கள் பெண் பிள்ளை என்று கேலி செய்யலாம். ஆனால் அவர்கள் தங்கள் சாகசங்களை ஓரளவோடு நிறுத்திக் கொள்வதையே நான் பெரிதும் விரும்புகின்றேன்.

செல்வி கமலாமணி, P.U.C.
ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரி.
சென்னை.

## ஆசிரியர்களின் வழி நடக்க வேண்டும்?



தற்கால மாணவர் அரசியற் சேற்றில் சிக்குண்டு தம் சக்தியை வீணாக்கும். அதே சமயத்தில் பல இடங்களில் பல சமயங்களில் ஆக்க வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். "To Practice is better than to preach." என்பதை உணர்ந்து தங்கள் ஆசிரியர்களின் வழிநின்று நடந்ததால் மாணவர்களின் சக்தியை ஆக்க வேலைக்கு பயன் படுத்துவது கடினம் அல்ல. ஆகவே இன்றைய மாணவரை உருவாக்குவதில் ஆசிரியர்களும் பெற்றோர்களுமே பெரும் பங்கு வகிக்கின்றார்கள்.

செல்வி. M. அன்னபூரணி, I.M.A.
புனிதமரியன்னைக் கல்லூரி,
தூத்துக்குடி.

## மாணவிகளாக இல்லை!

மாணவிகளைப் பற்றி என்றால் மாணவிகள் மாணவிகளாக இல்லை. இதைவிடப் பொறுத்தமாக வேறு வார்த்தைகளில் அவர்களைச் சித்தரிக்க முடியும் என நான் கருதவில்லை. தனிமையில் அவர்கள் அடக்கமாக இருப்பது போலிருக்கிறார்களே அந்த அடக்கம் இருவராக சேர்ந்து விட்டால் எங்கே போகிறது? இதற்காக பழமையிலேயே ஊறவேண்டும் எனச் சொல்ல வரவில்லை புதுமைப் பெண்களாக பண்பிலே ஊறியவர்களாக இருக்கவேண்டும் என்கிறேன். அப்போதுதான் அவர்கட்கு கிடைக்கின்ற மதிப்பு கிடைக்கும்.

வேதமூர்த்தி இரண்டாமாண்டு
மருத்துவம் மதுரை மருத்துவக்
கல்லூரி,

## உல்லாசமாக இருக்க வேண்டியது தான்! ஆனால் இப்படியா...

மணவர்கள் என்றுமே ஒரு புரியாத புதிர். எதெற்கெல்லாமோ போராட்டம் செய்வார்கள். போராட்டம் செய்ய வேண்டியதற்கெல்லாம் செய்ய மாட்டார்கள். அவர்கள் உல்லாசமாக இருக்க வேண்டியது தான். ஆனால் எதற்கும் ஒரு வரம்பு வேண்டுமல்லவா? உதாரணமாக பஸ்ஸில் செல்லும்போது அவர்கள் பொதுப்படையாக கேலி பேசாமல் உடன வரும் மாணவிகளை மட்டந் தட்டி கேலிசெய்து பேசுவதால் தான் இல்லாத பிரச்சினைகள் எல்லாம் எழுகின்றன. பஸ்ஸின் உளளேயோ. முக்கியமாக பஸ் நிலையத்தில் மாணவிகள் செல்லும் வழியை அடைத்துக் கொண்டு சிலர் நிற்பார்கள். மாணவிகள் அவர்களைக் கடந்து

www.thamizham.net - Free E Books No TM 14718

செல்ல வேண்டியிருக்கும். அதனால் ஏற்படும் அருவருப்புத் தன்மை எங்களுக்குத்தான் தெரியும். ஒரு சில மாணவர்கள் தங்கள் கல்லூரி வழியாக செல்லும் பஸ்களை விட்டு விட்டு மாணவிகள் உள்ள பஸ்ஸிலேயே ஏன்



ஏறிச் செல்கின்றனர்? இதனால் அதிக தொல்லைகள் அடைவது மாணவிகள்தான். படிக்கின்ற இளைஞர்களே ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? இப்படிப்பட்ட சில மாணவர்களின் நடத்தையினால் தான் மாணவர்கள் என்றாலே பலர் சற்று ஒதுங்கிச் செல்லுகின்றனர்.

செல்வி. V. ஆனந்தி II B.Sc.
எஸ்.ஐ.இ.டி.மகளிர்கல்லூரி,சென்னை

## பெண்கள் பிடிப்பு உடை அணிவது பண்பாடல்ல!

கல்லூரி மாணவிகள் முதலில் விஞ்ஞானப் படிப்பை விட்டு விட்டு மாணவர்களுக்கு இடம் கொடுத்து. தங்களுக்குத் தேவையான "சமையற் கலை"யை (Home Science) படிக்க வேண்டும், படித்ததை நடைமுறையில் கொண்டு வர நல்லதொரு வழி அதுவே. ஆண்களைப் போல் பெண்கள் பிடிப்பு உடைகளை அணிவது நம் பண்பாட்டிற்கும், மாணவ உலகத்திற்கும் ஏற்றதல்ல. கல்லூரி மாணவிகள் தங்களையொத்த சக மாணவர்களுடன் அளவு கடந்து பழகுவதை நாகரிகமாகக் கருதக் கூடாது. சரி நிகர் சமானமாகப் பெண்களும், ஆண்களைப் போல கல்லூரி நடவடிக்கைகளில் தீவிரப் பங்கு கொண்டு. வருங்கால சமுதாயத்தை வளம் பெறச் செய்ய வேண்டும்.

திரு ம. கலியாணராமன் II B.Sc.
செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி

## அழகாக இருக்கலாம்; ஆடம்பரமாக இருத்தலாகாது.

பெண்கள் மருத்துவம், இரசாயனம் பௌதீகம், தாவரநூல் போன்ற துறைகளில் மட்டுமே அதிக கவனம் செலுத்துகின்றனர். அரசியல். பொருளாதாரம், இலக்யகிம் போன்ற துறைகளில் போதுமான அளவிற்கு கருத்துச் செலுத்துவதாகத் தெரியவில்லை.

மாணவர்களைக் காட்டிலும் மாணவிகள் .தேர்வுகளில் அதிக மதிப் பெண்கள் பெற்றுத் தேறினாலும் பிற துறைகள் பற்றிய பொது அறிவு, உலகியல் அறிவு மிகவும் குறைவாகவே உள்ளது.

குடியாட்சி நாட்டில் அரசியல் பொருளாதாரம் பற்றிய சிந்தனையும் தனக்கென்று சொந்தக் கருத்தும் மாணவியரில் பலர் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

பெண்கள் நாகரிக முறையில் கவர்ச்சியாக உடையணிகின்றனர். அவை அழகாக இருக்கலாம்; ஆனால் ஆடம்பரமாக இருத்தலாகாது.

www.thamizham.net - Free E Books No TM 14718

இருப்பினும் அவர்களின் இடைவிடாத உழைப்பும் படிப்புத்திறனும் போற்றும் அளவில் உள்ளன.

திரு. ப. கணபதி II B.Com.
திருச்சி தேசியக் கல்லூரி.



**நடிகைகளை காப்பியடிக்கின்றனர்!**


பல பெண்கள் படிப்பில் ஆர்வம் மிகக் கொண்டிருந்தாலும் சிலர் அப்பெருமையைக் குறைக்கும் வண்ணம் நடந்து கொள்கின்றனர். மாணவியின் மனத்தில் சலனம் ஏற்படுத்துவது பெருமை என்ற எண்ணம் சில மாணவியருக்கு உள்ளது. பழந்தமிழரின் பண்பு இல்லாவிடினும் அடக்கத்தின் அளவிலாவது அக்கறைகாட்டலாம். திரைப்பட மோகம் குறைய வேண்டும். திரைப்பட நடிகைகளைக் 'காப்பியடித்து' உடைக் குறைப்பு செய்வது மறைய வேண்டும்.''

திரு. பழனியப்பன் III B.Com.
வ.உ.சி. கல்லூரி தூத்துக்குடி.

---

**மாணவர்கள் எல்லாத் துறையிலும் தலையிடுவது நன்மைக்கே!**

இக்கால மாணவர்கள் எதற்கும் கவலைப் படாமல் வாழ்கின்றனர். என்று சொன்னாலும் பின்னர் அவர்கள் செய்த தவற்றை உணர்ந்து



மிகச் சிறப்பான முறையில் வாழ்கின்றனர். மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் தலையிடுவதும் ஒரு நன்மைக்குத்தான். நாட்டில் உள்ள குறைகளைப் போக்க மக்கள் துன்பத்தைக் காண சகியாது போராட்டம் செய்கின்றனர். ஆனால் அருகில் உள்ள புல்லுருவிகள் அதனை பெரிது படுத்தி மாணவ சமுதாயத்தை ஒரு கேவலமான சமுதாயமாக கருத வைத்து விடுகிறார்கள் ஆனால் இதே மாணவர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களை சரியான முறையில் கூறினால் இழிவுக் கெல்லாம் இடமிருக்காதே! சில மாணவர்கள் வெளி நாடுகள் சென்று தங்கள் ஆற்றலை வெளியிட்டு சிறந்த பட்டங்கள் பெற்றுள்ளனர். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் சத்தியத்தை மேற்கொண்டு நடந்தால், அவர்களுடைய வாழ்க்கைப் பாதை மலர்கள் பூத்த பாதையாக இருக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

செல்வி வசந்தா. I B.A,
சென்னை இராணிமேரிக் கல்லூரி.

பேட்டிகள்; செயற்குழு

# அன்புள்ள ஆசிரியருக்கு.

சென்றதிங்கள் என்னுடைய குட்டிக்கதை வெளிவந்தது கண்டு மகிழ்ந்து உளம் பூரித்தேன். என்னுடைய அனுப்பிய கதை-கட்டுரை, கவிதைகள் சேம முறப் பாதுகாக்கப்பட்டு வெளிபாகின்றன என்பதற்கு இக்கதை தெளிவுடன் சான்று பகர்கின்றது.

**கவிஞர். தா. வளவன், வெட்டிவயல்**

இந்தப் பகுதிக்கு இன்னும் இரண்டு பக்கங்கள் தாராளமாக ஒதுக்கலாமே! செய்வீர்களா? முதல் பக்கத்திலேயே இடம் தரவும்.

**—சூஃா எம். இராது, சென்னை—7**

எங்கள் மனதிலிருந்த ஆவலான மகளிர் சிறப்பிதழை" நீங்கள் வெளியிடப் போவது குறித்து மிக்க மகிழ்ச்சி. எங்களது நன்றி, சிறப்பிதழ் சிறப்பாக வரும் என்று நம்பும்.

**—மா. கு. சரசுவதி, மாடன் வலசு. (கோவை)**

குறிக்கோளைக் கொன்று விடாதே" நல்ல படைப்பு. மெர்வின் நடை படித்து இன்புற்று மகிழ வேண்டியது. நெல்லை. சோமுவின் கவிதை கருத்தாழம் கொண்டது. கேள்வி—பதில் சிரிப்பு விருந்து தந்தது.

**—சிவசூரியன். மதுரைக் கல்லூரி, மதுரை—11.**

இன்றைய அரசியல்யுகத்தில் கட்சி சார்பில்லாமல் பூச்செண்டை நடத்தி வருகிறீர்களே இதுதான் பெரிய ஆச்சரியம்,

**—எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்.**

தொடர்ந்து பூச்செண்டு படித்து அதன் வளர்ச்சி கண்டு பூரிக்கிறேன் வெளி மாநில நண்பர்களுக்கு போட்டி இறுதி நாளை தள்ளி வைத்தால் என்ன?

**—பாலசுப்ரமணியன். கல்கத்தா-26**

சென்ற இதழில் பார்த்தசாரதி எழுதிய நாடகம் "அது"வாக இருந்தது. தங்கள் தலையங்கம், கல்லூரி திறக்கப்பட்டுள்ள இச்சமயத்தில் மாணவர்களுக்கு ஒரு பொன் மொழி.

**எஸ். எஸ். புருஷோத்தமன், மதுரை—1**

---

## அன்புள்ள வாசகர்களுக்கு!

வணக்கம். எங்களுக்கு ஏதாவது உதவி செய்ய விருப்பமா? பூச்செண்டிற்கு புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தலாமே! ஆண்டுச் சந்தா நான்கே ரூபாய்தான் என்று மற்றவர்க்கு எடுத்துக் கூறலாமே!

**—ஆசிரியர்குழு.**

www.thamizham.net - Free E Books No TM 14718

# தமிழா கேள்!

தமிழன் என்றொரு பெயரெதற்கு?
தரணியில் உனக்கொரு வாழ்வெதற்கு?
தமிழ்த்தாயைத் தட்டழியப் பண்ணிவிட்டு
தருக்குநடை போடலாமோ மானங்கெட்டு?

குற்றமற்ற நற்காலை வெட்டிவிட்டு
குறைமரத்தால் ஆயகாலைப் பொருத்தலாமோ?
கடல் மணலாய் கலைச்சொற்கள் மறைந்திருக்க—வீணே
கடன்வாங்கி வாழும் வாழ்வெதற்கு?

கையினிலே வெண்ணெயினை வைத்துக் கொண்டு
கல்வைநெய் கடையிற்போய் வாங்கலாமோ?
இன்றமிழில் ஈடற்ற சொற் பெருக்கிருக்க
இரக்கும் வாழ்வு உனக்கெதற்கு?

உணர்வற் றிருந்தாய் திருந்திடு
உந்தன் தவற்றை உணர்ந்திடு
உயர்தமிழ் நிலையை நினைந்திடு-தமிழா
உயிரை ஈந்தேனும் காத்திடு!

செல்வி வீ. உதயசோதி,
இளங்கலை இறுதி நிலை,
மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி,
மதுரை-2.

www.thamizham.net - Free E Books No TM 14718

சென்னையில்

# "மாணவிகளுக்கு மட்டும்"
# "மாணவர்களுக்கு மட்டும்"

*இந்த மாதிரி பஸ்கள் விடுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

---

**※ மாணவ மாணவிகளுக்கென்று தனி பஸ்கள் விடும் ஏற்பாடு முதன் முதலில் நேரம் தவறாமல் தங்கள் கல்லூரிகளுக்கு போக மிகுந்த சௌகரியமாய் உள்ளது. கால அட்டவணையையும், போகும் மார்க்கங்களையும் கூடிய வரை மாணவர்களுக்கு நலன் உண்டாகும் படி வகுத்திருப்பது மிகவும் போற்றத்தக்கது.**

**செல்வி. வி, ராஜலட்சுமி,** *பி.யு.சி. ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரி.*

---

ஜூலை மாதம் 7ம் தேதியினின்று தான் மகளிர்க்கு என்று தனியாக பஸ்கள் அனுப்பப் படுகின்றன. முன்பு ஸ்டூடண்ட்ஸ் ஸ்பெஷல் என்று பொதுவான பஸ்கள் இருந்தன. சாதாரண பஸ்களானால், எங்கள் ஸ்டாப்பிங்கில் நிற்காமல் சென்று விடும். மாணவர்கள் தனி பஸ்ஸில் செல்வதால் கல்லூரிக்குக் குறித்த நேரத்தில் சென்று விடலாம். மற்றவர்கள் ஏறி பஸ்ஸை அடைத்துக் கொள்வதும் இல்லை. அதில் வரும் மாணவர்களினால் எங்களுக்கு ஒரு தொல்லையும் ஏற்பட்டதில்லை. அவர்கள் நாங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கியபின்னர் "டாடா" சொல்லி விட்டுச் செல்வார்கள்; அவ்வளவு தான். இது கூட செய்யமாட்டார்களா என்ன? மகளிர்க்கென்று தனியாக பஸ் விடுவதாலும் நன்மை உண்டு. மாணவர்கள் இல்லாததால் நாங்கள் சுதந்திரமாக வரமுடிகிறது. ஆனால் இவ்வாறு தனி பஸ்கள் ஒதுக்கப்பட்டு இருப்பதால் மாணவர்கள் இன்னும் அதிகமாகவே மாணவிகளை கேலி செய்வார்கள்.

**இராதாமணி**
II பி, எஸ்ஸி,
எஸ்.ஐ.இ டி. மகளிர் கல்லூரி.

—

www.thamizham.net - Free E Books No TM 14718

# தாயை அறிந்த தாய்க்குயில்!



" அடிமை நிலையென்னும்
விலங்கில் தளையுண்டு
அழுது துயர்கொண்ட தேசங்கள் தமை
பொழுது புலர்ந்தழகு
பொலியும் கதிர் நோக்கிப்
போக அழைத்தேக வராய்-தாயே
மழலை மனம் குளிர-ஒரு
மொழியும் அருளாது
விழிகள் மலராது
துயில்வ தழகாமோ? "

—இக் கவிதையை [மொழி பெயர்க்கப்பட்டது] எழுதியது யார்? இந்தியத் தாய்க்கு இந்த இனிய பாமாலை சூட்டியவர்—கவிக்குயில் சரோஜினி நாயுடு ஆவார். "இந்தியாவில் மகளிர் இயக்கத்தின் முன்னோடி" என்று பல பத்திரிகைகளால் புகழப்படும் இவர்தான், முதல் இந்தியப் பெண் கவர்னர். பதவி வகித்த மாநிலம் உத்திரப்பிரதேசம். 1936 ஆகஸ்டில் ரஷ்யாவில் ஆற்றிய உரையாடல் சோவியத் மக்களைக் கவர்ந்தார்; ஆனால் தனது கவிதைகளால் உலகையே கவர்ந்தார். பாடித்திரிந்த இசைக்குயி லின் ஓசை 1949 மார்ச் இரண்டாம் நாள் ஓய்ந்தது. ஓசை ஓயாதிருந்திருந் தலால்—இவ்வாண்டு கவிக்குயிலின் 90-வது பிறந்த ஆண்டாக இருக்கும்.

---

※ ஓவியர் மனைவி: என்னங்க! என் படத்தை வரைய மாட்டீங்கறளே?
ஓவியர்: நீ என் முன்னே 2 நிமிஷம் பேசாமல் உட்காரமுடியுமா?
லதா. (B.Sc.) திருநெல்வேலி.

※ உலகிலேயே மிகப்பெரிய ஓவியம் ஒன்றை மேற்கு பெர்லின் ஓவியர் மைக்கேல் ஆஸ்வால்டு தீட்டியுள்ளார். 'பசிக் கொடுமையினால் ஓலமிடும் மனிதனைக் காட்டும் அவ்வோவியத்தின் உயரம் 440 அடி. அகலம் 236 அடி. அதற்கு ஆன காலம் ஓராண்டு.

www.thamizham.net - Free E Books No TM 14718

# இதுவும் ஒரு புதுமையா?

காலச் சக்கரம் வெகு வேகமாக முன்னோக்கி சுழன்று சென்று கொண்டிருக்கிறது — புதுமையெனும் பொருள் நோக்கி! நடை உடை பாவனை அரசியல் அறிவு அனைத்திலும் புதுமைதான். நாகரீகத்தின் சிகரத்தைத் தான் எத்தனை வேகமாக உலகம் நெருங்கிக் கொண்டிருக்கிறது!.

பழங்காலத்தில் அடுப்பறையைத் தாண்டி வராத பெண்கள் இன்று அரசியல் வரை வந்து நிற்கிறார்கள் என்றால்—என்னே புதுமையின் வேகம்! இத்தகைய வளர்ச்சி தேவை தான் இந்த விஞ்ஞான உலகத்திற்கு. ஆனால் பண்டுக்கோர் பாரதப் பெண்டிர்' என்ற பெருமையுடன் செருக்குற்று நிற்கும் இந்த பாரத மண்ணில் பிறந்த மகளிர்க் கென்று கூறப்படும் தனிப்பட்ட நெறிகளுக்கு கூடவா புதுமை தேவை?

ஆண்களுடன் சம அளவில் பழகுவதும் நடை உடைகளில் மேலை நாட்டினரை பின்பற்றுவதும் ஏதோ தற்கால நாகரீகத்தின் அத்தியாவசியத் தேவைகள் என்று விட்டு விடலாம். கருகி விட்ட மலர்கள் மறு முறை மலர முயல்வது போல் ஒரு முறை இழந்த வாழ்வை மறு முறை 'மறு மணத்தால்' திருப்பப் பெற முயல்வதும் இப் புதுமைகளுள் ஒன்றென்றால்......?



பாட்டெழுதும் பாவலன் பூவையரை ஒப்பிடுவது மலர்களுடன் தான்—காரணம்? மென்மையான சுகந்த மணம் வீசும், ஒரு முறையே மலரக்கூடிய அந்த மலரைப் போன்று பெண்மையைப் பெரிதெனப் போற்றி, கற்பு மணம் கமழ மலரின் மலர்ச்சியை போல ஒரு முறை கூடுவதே மணம் என்றிருக்கும் அவர்கள் தன்மையால் தான். இதழ்கள் சுருங்கி வாடத்துவங்கும் அந்த மலர் மறு முறை மலர்கிறதா? அல்லது மணம் தான் வீசுகிறதா?

www.thamizham.net - Free E Books No TM 14718

GIVE US THE PLEASURE OF SERVING YOU
THE LARGEST AND MOST
COMPREHENSIVE RANGE OF
DIESEL PARTS UNDER ONE ROOF !!!

*Service Departments :*

Fuel Injection : Calibration of Fuel Injection pumps reconditioning of injectors
Electrical: Electrical Starters Dynamos, Magnetos and rewinding of Motors
Mechanical Servicing of Indu
Engineering : Strial Plant and Equipment

*Manufacturing Lines :*

"DVD" Fuel Injection Pipes

"DVD" Garbon Brushes
"DVD" Field Coils
"DVD" Governor Diaphragm.
"DVD" Nozzle Testers
"DVD" Fuel Injection Components

AGENTS

"PIONEER" 'O' RINGS, Oils Seals & Synthetic Packings
(A FENNER COCKILL PRODUCT)

# THE INDIAN ENGINEERING & TRADING COMPANY

(ESTABLISHED 1949)

*15, WALLERS ROAD, MADRAS*

TELEPHONE : 88761/88762
FACTORY :
VYASARPADI

TELEGRAM : FUELPUMP
BRANCHES
BANGALORE
HYDERABAD

www.thamizham.net - Free E Books No TM 14718

பாரதி, தான் கூறிச்சென்ற புதுமை பெண்ணுக்கு இப்படி ஒரு 'புதுமை' அவசியம் தேவையென்று கூறிச் சென்றாரா? இல்லையே! தாம் பாடி வரும் பத்தினி மகளிரின் வழி வந்த பெண்டிர் நம் இந்திய பண்புகளை, பெண்களின் கற்புத் தன்மையை நிலைநாட்டி பார்மாறினும் பாரத பெண்டிரின் பண்புகள் மாறாது என்று வலியுறுத்துவது தான் முறையே தவிர, அனைத்திலும், தேவையற்ற நம் பண்பாட்டிற்கு இழுக்கினைத் தரக்கூடிய, புதுமைகளை கையாள்வது அல்ல.

மணமான சிறிது நாட்களிலேயே கணவனை இழந்து விட்டால் நாங்கள் ஏன் மறு மணம் செய்து கொள்ளக் கூடாது? துணையின்றி கண்ணீரிலேயே நாட்களை கழிக்க வேண்டுமா? என்று புதுமை வாதம் செய்வோர் எத்தனையோ பேர். துணையை இழப்பதால் வரும் தனிமையை மற்றொரு வாழ்க்கை துணையைத் தேடிக்கொண்டு போலியாக வாழ்வது தான் நிவர்த்தி செய்ய முடியும் என்பதல்ல. வாழ்ந்த நேரம் சில கணங்களே ஆயினும் அந்த நினைவுகளின் துணைக்கொண்டு உறுதி படைத்த நெஞ்சோடு வாழ்ந்து காட்டிய பெண்டிர் பலரை கொண்டிருத்தலால் தான் இந்தியா ஏனைய அனைத்துலக நாடுகளினின்றும், பண்பு, கலாசாரம் இவற்றில் தனிப்பட்டு 'புனித இந்தியர்' என்று அவை நோக்கும் வகையில் அமைந்துள்ளது.

பூவை ஒத்தவர் பூவையர். பூத்தலை ஒத்தது மணவாழ்வு என்பதனை மறந்து, நம் நாட்டின் மதிப்பினை குறைக்கும் வகையில் நாட்டு பண்புகளைத் துறந்து போற்றப் பெறும் நம் பெண்மைக்கே இழுக்கினைத் தரக்கூடிய இப்படிப்பட்ட ஒரு புதுமை அவசியமா?

நீங்களே சொல்லுங்கள்!

R. வான்மதி, [B.Sc.]
எஸ்.ஐ.இ.டி. மகளிர் கல்லூரி,
சென்னை.

## வெளிநாட்டிலிருந்து வந்த சிந்தனை...

* டாக்டர் ஹெல்கா அன்டோன் என்ற ஜெர்மானிய மாது தமிழில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். அவர் தமிழ் நாட்டிற்கு வந்த போது சொன்னார், "தமிழ் நாட்டில் உள்ள பலர் தமிழிலேயே பேசுவதில்லை. ஆங்கிலம் தான் பேசுகின்றனர். தமிழில் பேசுவதை இழிவாகக் கருதுகின்றார்கள். ஏனென்று தெரியவில்லை. ஆட்சி மாறியும் நினைத்த அளவுக்கு தமிழ் மொழிக்கு வளர்ச்சி ஏற்படவில்லை."

## உள் வீட்டிலிருந்து வந்த சிந்தனை...

* சமையற் குறிப்பு: (என்னவிருந்தாலும் மகளிர் சிறப்பிதழல்லவா!) புளித்த மாவு இருந்தால் புளித்த தோசை தான் செய்யவேண்டும் என்று அஞ்ச வேண்டாம். அதன் புளிப்பை போக்கி விடலாம் எப்படி? சிறிது அப்பள சோடாவை மாவில் போட்டு கரைத்து விட்டால், அதன் புளிப்பு மறைந்துவிடும்.

தகவல்: வி. ஆனந்தி, S.I.E.T.

www.thamizham.net - Free E Books No TM 14718

# ஒழியட்டும் இத்தகையோர்

'பூமகள்', மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மதுரை–2.

இன்றைய உலகின் போக்கினைக் கண்டு ஏங்கித் தவிக்கும் உள்ளத்தின் குமுறல் இது. இத்தகையோர் ஒழிந்து விட்டால் உலகம் எப்படியிருக்கும்?

தென்றலினும் இனிய தீந்தமிழை மதியாதார்
சென்றவழி தனில்மாளட் டும்.

எங்குமே நிறைபரனை இதயத்தே பணியாத
பங்கம்சேர் பதரழியட் டும்.

கற்புடை மகளிரைக் கண்ணேபோல் காவாத
அற்பரும் எரிந்தவியட் டும்.

புல்லறிவால் பொறியடக்கம் நீங்கியே வாழ்கின்ற
கல்நெஞ்சர் மாண்டொழியட்டும்.

காசினையே தெய்வமாய் வழிபடும் தன்மைசேர்
மாசினரும் சேர்ந்தழியட் டும்.

நன்மக்கள் பேரறிவை நலமுடனே ஏத்தாத
புன் மக்கள் இங்கொழியட் டும்.


கலைகளையே போற்றுது கண்மூடி வாழ்கின்ற
புலையரெலாஞ் செத்தொழியட் டும்.

வறுமையோடு வாழ்ந்தாலும் நெறிபிறழா நெஞ்சினரை
வெறுப்போரும் உடன்மாளட் டும்.

உழைத்தோர்தம் குருதியை உறிஞ்சியே குடிக்கின்ற
பிழைப்பிலாப் பேரழியட் டும்,

மணித்துளிக்கோர் சிந்தையொடு மாநிலத்தே வாழ்கின்ற
மனிதரெலாஞ் செத்தொழியட் டும்.

www.thamizham.net - Free E Books No TM 14718



# காதலுக்கு நேரம் கிடையாதா?

மாலை வேளையில் சூரியன் தன்னுடைய ஒளியைச் சிறிது சிறிதாக இழந்து கொண்டிருந்த நேரத்தில் நான் மெதுவாக எப்பொழுதும் அமரும் இடத்திற்குச் சென்று உட்கார்ந்தேன. சிறுவர்களின் சிரிப்பு ஒலிகளும் ஆண்களும் பெண்களும் சாரிசாரியாகச் சென்று கொண்டு இருந்த அழகும் தேங்காய், மாங்காய், பட்டாணி சுண்டல் ஆரவாரங்களும், பல மாகாணத்திலிருந்து வந்த மக்களின் மகிழ்ச்சியும் ஒன்று சேர்ந்து காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

'மெரினா கடற்கரை' என்றாலே ஒரு தனி அலாதி. காதலர்க்கு ஏற்ற இடம். கவலை. மறக்க மகிழ்ச்சி சுரக்க, இனிய முகங்களைக் காண, எல்லாம் ஒருங்கே தன்னகத்தே தனிச் சிறப்புடன் விளங்குவதுதான் இந்த மெரினா.

நான் வந்து அரைமணி நேரம் ஆகியும் வனிதா வராமல் இருப்பதைக் கண்டு நான் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதாயிற்று. நேரம் சென்று கொண்டுயிருந்தது.

இன்று கட்டாயம் வனிதா வர வேண்டியது; ஏன் இன்னும் வராமல் இருக்கிறாள்; ஏனென்று எனக்குத் தெரியவில்லை !

"சாரி, நீண்ட நேரம் உங்களைக் காக்க வைத்து விட்டேன். இன்றைக்கு ஒரு அவசர கேஸ் வந்து விட்ட படியால் குறிப்பிட்ட நேரத்திற்கு வர முடியவில்லை; மன்னிக்கவும்."

அவள் கூறுவதையே கேட்டுக் கொண்டு இருந்தேன். ஒன்றும் பேசவில்லை. "ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள்; மகிழ்ச்சியாக இருக்கும் நீங்களே இன்று இப்படியிருந்தால் எப்படி?"

ஒவ்வொரு நாளும் லேட்டாக வந்தவுடன் சாரி என்று கூறி தப்பித்துக் கொள்கிறாள். சாரி என்ற வார்த்தையைக் கண்டு பிடித்தாலும் பிடித்தார்கள் செய்வது எல்லாம் செய்து விட்டு சாரி என்று கூறி தப்பித்துக் கொள்ள வழி செய்து விட்டார்கள்." என்றேன்.

"உங்களுக்கு ஐந்து மணி அடித்தவுடன் டாண் என்று வெளியே வந்து விடலாம்; உங்களைத் தட்டிக் கேட்க ஆள் இல்லை; மேனேஜரா யிற்றே. என்னுடைய நிலைமை அப்படியா? புறப்படலாம் என்றிருக்கும் பொழுது தான் அவசர கேஸ் ஏதாவது வரும்; அதை கவனிக்க வேண்டும். கவனிக்கா விட்டால் என்னுடைய பெயருக்கு இழுக்கு; என் தொழிலுக்கும் இழுக்கு."

www.thamizham.net - Free E Books No TM 14718

"ஆமாம். நீ தான் பெரிய டாக்டராயிற்றே! என்னைப் போலவா? உனக்குப் பல வேலைகள் இருக்கத் தான் செய்யும்; நானென்ன சாதாரண மேனேஜர் தானே!"

"சரி. சரி இப்படி பேசி ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும்; நான் வந்ததே லேட் அதில் நீங்கள் இப்படி பேசி நேரத்தை வீணடிக்கிறீர்கள்? உங்களுடைய முடிவைப்பற்றி இன்று கூறு கின்றேன் என்றீர்களே! என்ன முடிவு? காயா, பழமா?"

"காயும் இல்லை; பழமும் இல்லை இரண்டும் உள்ள நிலை. என்னுடைய முடிவை வாயால் கூற சற்றுத் தயக்கமாக இருக்கின்றது. அதனால்,"

"அதனால். ?"

"கடிதம் மூலம் என்னுடைய முடிவைக் கூறியிருக்கின்றேன். என்னுடைய முடிவைப் பார்த்து சற்று வியப்பும் திகைப்பும் ஏற்படக் கூடும். ஆனால் அதற்கு எல்லாம் தளரமாட்டாய் என்று தெரியும். என்னுடைய முடிவை அறிந்தவுடன் உன்னுடைய விருப்பம் அதாவது உன் முடிவு எனக்கு நாளை மாலை இதே நேரத்தில் தெரியவேண்டும். கட்டாயம்; நாளை இதே போல் தாமதமாக வராமல் உன்னுடைய முடிவைக் கூற வேண்டும்."

கடிதத்தை வாங்கியவுடன் புறப்படலாமா? என்று கேட்டு விட்டு எழுந்து விட்டாள்.

நாங்கள் இருவரும் தங்கள் தங்கள் இருப்பிடங்களை நோக்கிச் சென்றோம் என்னுடைய அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தேன்; கடிதத்தைப் படித்திருப்பாளா மாட்டாளா என் நினைவே என் மனதில் தோன்றிக்கொண்டிருந்தது. அதில்.

பேரன்பு மிக்க வனிதாவுக்கு,

நான் கூறப்போகும் செய்தி உனக்குச் சற்று மயக்கத்தை ஏற்படுத்தலாம். இருந்தாலும் அந்தச் செய்தியைக் கூறாமல் என்னால் இருக்க முடியாது. கூறுகின்றேன். கூறிய

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

*மனிதனுடைய மூளையும் ரேடியோ நிலையத்தைப் போல ஒலி பரப்புகிறது என்று அலெக்சாண்டர் லியோன்டோவிச் என்ற விஞ்ஞானி நிரூபித்துள்ளார். மனித மூளை பரப்பும் சக்தி வாய்ந்த உயிர்—மின் காந்த அலையின் நீளம் சுமார் ஒரு சென்டிமீட்டர் அதிர்வு வினாடிக்கு 100கோடி சைகிள்கள். இவையே 'டெலிபதி' என்ற தொலையுணர்வுக்கு காரணமாகும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



www.thamizham.net - Free E Books No TM 14718

வுடன் உன்னுடைய விருப்பம் என்னவோ அதன் படி செய்யவும்.

இதுவரை நானும் நீயும் காதலர்களாக இருந்தோம். இனிமேல் தம்பதிகளாகும் போது நம்முடைய நிலையே வேறு நம்மிருவருடைய உள்ளங்களில் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது. அப்படியிருக்குமானால் பின்னால் நம்முடைய வாழ்க்கை இனிதாக இருக்காது. அதற்காக என்னிடமுள்ள ஒரு குறையைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு ...பத்து வயதிலிருந்து ஆஸ்துமா என்ற நோய் வந்து விட்டது நான் பார்க்காத மருத்துவம் கிடையாது. என்ன செய்தும் அதனைப் போக்க முடியவில்லை.

மிகவும் பிரசித்திப் பெற்ற ஆஸ்பத்திரிக்குச் சென்றும் இதனை முழுவதும் ஒழிக்க முடியாது அவ்வப்பொழுது வந்த கொண்டு தான் இருக்கும் என்று கூறி என்னை அனுப்பி விட்டனர். இத்த நேரத்தில் தான் உன்னுடைய சந்திப்புக் கிட்டியது. உன்னிடம் பேசும் பொழுது எல்லாம் ஏதோ ஒன்று என் மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது அதைக் கூறும் சந்தர்ப்பம் இப்பொழுது தான் கிடைத்தது.



ஆஸ்துமா பற்றி நான் ஒன்றும் அதிகம் கூற வேண்டியதில்லை. உனக்கே தெரிந்திருக்கும். இப்பொழுது இது சிறிய விஷயம் என்றாலும் பின்னால் நம் அன்பிற்கும் பங்கம் ஏற்படுத்தி விட்டால்...? நீயோ ஒரு டாக்டர்; நானே ஒரு நோயாளி. இந்த நிலையில் என்னை ஏற்றுக் கொள்வாயோ மாட்டாயோ? என்ற கேள்விக் குறியினால் தான் உன்னிடம் நான் நேரே கூற முடியவில்லை. இப்பொழுதே நன்றாக யோசித்துக் கொள். தம்பதிகளாக இருந்து பிரிவதை விட காதலர் இருந்து பிரிவது மேல். உன்னுடைய முடிவை எதிர்பார்க்கும்,

அன்புள்ள,

பாஸ்கரன்.

அடுத்த நாள்.

கடற்கரையில் எப்பொழுதும் உட்காரும் இடத்தில் வந்து அமர்ந்து சில நிமிடங்கள் ஆனவுடன் "வந்து விட்டீர்களா" என்ற குரல் கேட்டது. அந்தக் குரல் வனிதாவிற்கே உரித்தானது.

வனிதா முகம் என்றுமில்லாத இன்பப் பொலிவுடன் காட்சியளித்துக் கொண்டிருக்கவே அவளுடைய முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்க்க வேண்டியதாயிற்று.

www.thamizham.net - Free E Books No TM 14718

'என்ன அப்படிப் பார்க்கின்றீர்கள்! என்றும் உள்ள வனிதா தான்; இன்று புதிய வனிதா அல்லவே!"

அவளாகவே முடிவைக் கூறட்டும் என்று அமைதியாக இருந்தேன்.

---

* பெண்ணின் நாக்கு அவளுக்குப் போர் வாளுக்குச் சமம். அதை ஒரு பொழுதும் அவள் துருப்பிடிக்க விடுவதில்லை.

—நெக்கர். (இராமசாமி, ஸ்டான்லி மெடிகோ.)

---

"இந்தாருங்கள். இந்தக் கடிதத்தில் என்னுடைய முடிவு இருக்கின்றது."

"நான் கடிதத்தில் என்னுடைய முடிவைக் கூறியிருந்தேன் என்றதற்காக நீயும் அப்படியே எழுதித்தான் தர வேண்டுமா? வாயால் கூற முடியாதா?"

"நீங்கள் எப்படி சிலரகசியங்களைக் கூறியிருந்தீர்களோ, அதேமாதிரி நானும் சிலவற்றைக் கூறியிருக்கிறேன். அதனை நேரே சொல்ல சிறிது தயக்கம். எனவே கடிதத்தில் எழுதி விட்டேன், கடிதத்தைப் படித்து இப்பொழுதே உங்கள் முடிவைக் கூற வேண்டும்."

என் ஆருயிர்......,

உங்களுடைய வெளிப் படையான குணத்தைக் கண்டு உள்ளம் பூரித்தேன். நீங்கள் ஒரு நோயாளி என்று குறிப்பிட்டு எழுதியதைக் கண்டு நான் டாக்டராக இருப்பது எதற்கு? நீங்கள் என்னிடம் சிகிச்சைப் பெறுவதை பாக்கியமாகவே கருதுகின்றேன். ஆஸ்துமா ஒன்றும் கொடிய நோய் அன்று. அவ்வப்பொழுது வந்து தொந்தரவு செய்யுமே தவிர உயிரை எடுத்துக் கொள்ளாது. என்னுடைய அன்பு உண்மையானது. கட்டாயம் நான் உங்களை ஏற்றுக் கொள்கிறேன் ஆனால் நான் இப்பொழுது கூறும் செய்தி உங்களுக்குச் சற்று மயக்கத்தை உண்டாக்கலாம்.

எனக்கும் ஆஸ்துமா நோய் உள்ளது. இதற்காகவே தான் நான் விரும்பி டாக்டர் படிப்பும் படித்தேன் நாம் அன்பின் மூலம் தான் கட்டுண்டோம் என்றாலும் நோயினாலும் இருவரும் இணையாகவே பிணைக்கப்பட்டு இருக்கின்றோம் நான் உங்களை ஏற்றுக்கொள்கிறேன் ஆனால் நீங்கள்.....

அன்புள்ள,

வனிதா.

கடிதத்தைப் பல முறை வாசித்தவுடன் என் மனம் புயலில் சிக்கிய தோணி போல் அலை பாய்ந்து கொண்டு இருக்கவே ஒன்றும் கூற முடியாமல் இருந்தேன். எனக்குத் தான் நோய் இருக்கிறது. என்றால் அவளுக்கும் இருக்கிறதே! வனிதாவை மணப்பதா?

நீண்ட நேரம் யோசித்த பின் முடிவிக்கு வந்தேன் —

"வனிதா இன்று நமக்கு நிச்சயதார்த்தம்; அதற்கு அடையாளமாக மெரினா புகாரி ஓட்டலுக்குச் செல்லலாம் வா!" என்று கூறி வனிதாவைக் கைப் பிடித்து அழைத்துச் சென்றேன்.


அனுப்பியவர்: சில்வியா

—ஊட்டி.

www.thamizham.net - Free E Books No TM 14718

# பாரதி கண்ட பெண்மை

R. இராஜலட்சுமி, II B Sc. S.I.E.T. சென்னை.



### தெய்வப்பெண்

“பெண்ணின் பெருந்தக்க யாவுள’...என்று பொய்யா மொழியார் போற்றும் பெண்மை.’ புரட்சிக் கவிஞரின் பாடல்களினுல் மேலும் புதுமை பெற்றிருக்கிறது. பாட்டுக்கொரு புலவன் பாரதி தன் பாடல்களால் தேசீய உணர்ச்சியைத் தட்டி எழுப்பியதோடு அல்லாமல், அடிமைப்பட்டுக் கிடந்த பெண்ணினத்தின் விடுதலைக்கும் வித்திட்டார் பெண்மையைத் தெய்வமாகக் கொண்டாடினுர்.

“பெண்மை வாழ்க என்று கூத்திடு
வோமடா !
பெண்மை வெல்க என்று கூத்திடு
வோமடா!”

அன்னை பராசக்தியே பெண்ணுருக் கொண்டு. மனிதர் தம்மை அமரர்களாக்கி இவ்வையம் புதுமையுறச் செய்யத் தோன்றினுள் என்பது அவர் கருத்தாகும். பாரதி, பெண்ணைத்தெய்வமாகக் கருதியே, ‘பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ’ என்று மக்களைப்பார்த்துக் கேட்கின்றுர்.

### நெறிகள் காட்டும் பெண்

ஈர உள்ளத்தோடு வீர நலமும் சார்ந்து பெண்கள் விளங்க வேண்டும் என்பதை பாரதியார் நன்கு வற்புறுத்தியுள்ளார். மாதர்கள் வீட்டு வாழ்வில் காட்டும் அன்பு நெறியும் நாட்டு வாழ்வில் காட்டும் பண்பு நெறியும். அமைதியில் உள்ள தம் பெண்மை நெறியினுல் வேண்டுங்கால் வேண்டியது விளைக்கும் வீர உணர்வுமே அன்றும் இன்றும் உலகை வாழ்விக்கின்றன; என்பதை அவர் வலியுறுத்தி உள்ளார்.

### புதுமைப் பெண்

பாரதி கண்ட புதுமைப் பெண் நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும்,. உடையவளாகத் தோன்றுவாள். புதுமைப் பெண்ணின் சொற்களும் செய்கையும் இக்காலத்திற்கு மட்டும் புதுமையானவை அல்ல. வேத நூல்களில் கூறிய படி. பழங்காலத்திலே ஆண் பெண் சம உரிமை பெற்று இருந்தனர் என்பதை கவிஞர் வலியுறுத்துகின்றுர். பட்டங்கள் பல பெற்று, ஆணுக்கு நிகராக பாரினில் சட்டங்கள் பல செய்து புதுமைப் பெண் வாழ்ந்திடுவாள். ஆணும்,

www.thamizham.net - Free E Books No TM 14718

பெண்ணும் நிகரெனக்கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்கும்" என்பது அவர் கருத்தாகும்.

## வீரப்பெண்

பாரதி கண்ட வீரப்பெண்கள், "வீட்டிலோர் பொந்தில் வளர்வதை ஒழிப்பவர்கள்; சாத்திரங்கள் பல பல கற்பவர்; சவுரியங்கள் பல பல செய்பவர்; மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பர்; மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பர்; மேலும் ஆண் மக்கள் போற்றிட வாழ்வர்" ஆவர்.

கலி யழிப்பது பெண்கள் அறமே; துன்பம் தீர்வது பெண்ணாலே; எனவே பெண்ணைக் கண்ணைக் காக்கும் இரண்டிமைகளைப் போலவே காத்திட வேண்டும்' என்று வற்புறுத்தி

'உயிரைக் காக்கும், உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக் குயிராய் இன்பமாகிடும்;
உயிரினும் இந்த பெண்மை இனிதடா!'

என்று பெண்களை உயர்த்திக் காட்டுகின்றார்.

*மனித உடலில் இரத்த அணுக்களை உற்பத்தி செய்யும் மஜ்ஜையை [MARROW] உடலைவிட்டு வெளியில் சோதனைக் குழாயில் முதன்முதலாக வளர்த்துள்ளார் [illegible] என்ற ருசிய விஞ்ஞானி. ரேடியக் கதிர் வீச்சால் அவதியுறுவோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

"நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே, நூறிரண்டு மலைகளைச் சாடுவோம்; காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்" என்று கூறி, பெண்களால் முடியாதது யாதொன்றுமில்லை எனக் காட்டுகின்றார் பாரதி.

## விடுதலைப் பெண்

அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களை நினைத்து பாரதி மிகவும் கலங்குகின்றார். அவர் தம், பெண்கள் விடுதலைப் பாட்டில்,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என அவர் தம் எண்ணக் குமுறலை வெளியிட்டுள்ளார்.

## கற்புடைப் பெண்டிர்

"கற்பு நிலை என்பது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாகும். வற்புறுத்திப் பெண்களைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்' என்று கூக்குரலிட்டு பெண்களுக்கு உரிய உரிமையை மேலும் எடுத்துக் காட்டுகின்றார். இந்நூற்றாண்டில் மாதர்கள் திகழ்ந்தால் இவ்வையம் புகழோடு திகழும் என்பதில் ஐயமில்லை.

* சகோதரிகளே, நீங்கள் தலைநிமிர்ந்து நடங்கள். ஆனால் மற்றவர்கள் தலைகுனிய நடக்க வேண்டாம். நீங்கள் சிரித்துப் பேசுங்கள். ஆனால் பிறர் சிரிக்கும்படி பேசாதீர்கள்!

www.thamizham.net - Free E Books No TM 14718

ஒரு மினி பேட்டி:

# இந்தியாவின் முதல் பெண் மருத்துவரோடு சில நிமிடங்கள்

செய்திக்குழு : வணக்கம் மேடம். நீங்கள்...

பெண் :: யெஸ்!! வாட் டூ யூ வாண்ட்??

செய்திக்குழு : நீங்கள்.. டாக்டரா??

பெண் :: கரெக்ட்!! சாதாரண டாக்டரல்ல. இந்தியாவில், சிறந்த முறையில் பயின்று தேறிய முதல் பெண் டாக்டர்.

செய்திக்குழு : அப்படியா!! தங்கள் பெயர்??


பெண் :: திருமதி. ஸ்கார்லீப்.

செய்திக்குழு : எந்தக் கல்லூரி?

ஸ்கார் :: சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரி.

செய்திக்குழு : எப்போது சேர்ந்தீர்கள்??

ஸ்கார் :: 1875-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில். நான்கு பெண்கள் முதன் முதலாக மருத்துவக் கல்லூரியில் காலடி வைத்தோம்.



செய்திக்குழு : இடம் சுலபமாகக் கிடைத்ததா?? எந்த வித சிபாரிசு.. பணம்..??

ஸ்கார் :: மூச்! அப்போது அதெல்லாம் கிடையாது. ஆனால் எங்களை (பெண்களை) மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துக் கொள்வது பற்றி ஏராளமான எதிர்ப்புகளும், கேலிகளும் கிளம்பின. பிரிட்டனிலும் ஏகப்பட்ட எதிர்ப்பு. எப்படியோ, இறுதியாக இடம் கிடைத்தது, 1878ல் தேறிய நான்கு பெண்களில் பல பாடங்களில் பல பரிசுகள் பெற்று பட்டம் வாங்கினேன்.

செய்திக்குழு : M.B.B.S. பட்டம் தானே :

ஸ்கார் :: இல்லை. எங்களுக்கு L.M.&S. பட்டம் தான் அப்போது தந்தார்கள். அதை சென்னை பல்கலைக்கழகம் 1925ல் தான் M.B.B.S. என்று மாற்றியது.

www.thamizham.net - Free E Books No TM 14718

செயற்குழு : பிறகு, எங்கு சேவை செய்தீர்கள்?

ஸ்கார் : உங்களில் சிலர் வெளிநாட்டிலேயே படிப்பு முடிந்ததும் தங்கி விடுவதைப் போல இல்லாமல், என் தாய் நாட்டிற்கு சேவை செய்ய வேண்டிய என் கடமையை நிறைவேற்ற லண்டனுக்குச் சென்று விட்டேன்.

செயற்குழு : தற்போதைய மகளிர்களைப் பற்றி...

ஸ்கார் : [சிரித்துக் கொண்டே] சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆக்கப் பணிகளிலே துணிந்து காலடி வைக்கட்டும்.

செயற்குழு : பூச்செண்டு வாசகர்களுக்கு......

ஸ்கார் : எனது வணக்கங்கள்.


[திடுக்கிட்டு கண் விழித்தோம். கற்பனை உலகிலிருந்து விடுபட்டோம்.]

பேட்டி : R. நிர்மலா (B.A.)
சேலம்-4

---


*With best compliments from :*

**PILOT PEN CO. (India) PVT LTD.**




'Catholic Centre,' Armenian St, MADRAS-1.

மு. ஜெய்ஜோதி,
இளங்கலை முதலாண்டு
திருவள்ளுவர் கல்லூரி.

## கல்லூரி விடுதியில் நடந்தது:-




புகுமுக வகுப்பு மாணவிகள் மட்டும் தங்கியிருக்கும் விடுதி இரவு நேரம் சுமார் எட்டு மணி. நான் தங்கியிருக்கும் அறையின் உள்ளும், வெளியிலும் மாணவிகளின் கூட்டம். ஒரே பரபரப்பு. அழுகைக் குரல்களும் அவலக் குரல்களும் என் செவியில் வந்து மோதுகின்றன.

அன்று மாலை நான்கு மணிக்கு விடுதியின் வாசற்படியில் கால் தடுக்கி கீழே விழுந்ததால், எனக்குக் காலில் பலமான அடி-கால் சுளுக்கிக் கொண்டது. தோழியரின் உதவியால் என் அறைக்குச் சென்று தூங்கி விட்டேன். இரவு எட்டு மணிக்குக் கண் விழித்த போது தான் கண்டேன் அக்காட்சி தனை. மாலையில் நான் படுத்ததும் சுரம் கண்டு வாய் புலம்பியிருக்கிறேன்...... என்னுடைய பிதற்றலைக் கேட்டு, மற்றவர்கள் விபரீத கற்பனை செய்துக் கொண்டு பயந்த நிலையிலே என்னருகே அமர்ந்திருக்கின்றனர் அடியின் தாக்குதலால் கண்ட சுரம் சிறிது நேரத்திற்குள் நின்று விட்டது; வியர்த்துக் கொட்டியது. ஒரே வலி; கட்டிலை விட்டு எழுந்த நான் கை கால்களை உதறினேன். ஏற்கனவே பயந்த நிலையில் இருந்த தோழிகள், அவர்களை நான் அடிக்க வருவதாக எண்ணிக் கொண்டு, பயந்து கூச்சலிட்டு, என் அறையிலிருந்து வெளியே ஓடி விட்டனர். இதைக் கண்ட நான், 'ஏன் ஓடுகிறார்கள்' என்று தெரியாமல் அதிர்ச்சியடைந்து நின்று விட்டேன். அவ்வமயம் அங்கே வந்த விடுதிக் காப்பாளரிடம் ஆங்காங்கே நின்றிருந்த தோழிகள், நான் அவர்களையெல்லாம் அடிக்க வந்ததாகவும் என்னைப் பார்ப்பதற்கு அச்சமாக இருப்பதாகவும் கூறினார்கள். விடுதிக் காப்பாளர் ஒன்றும் புரியாத நிலையில் செய்வதறியாது உடனே என்னை, மாடியிலிருக்கும் அவரது அறைக்கு அழைத்துச் சென்றார். மறுநாள் பிற்பகல் எனக்குப் புகுமுக வகுப்புத் தேர்வு. அந்நினைவு என்னை மேலும் கண் கலங்கச் செய்தது. கீழேயிருக்கும் எனது அறைக்குச் சென்று புத்தகம் எடுத்து வரலாம். என்று எண்ணி, காப்பாளரிடம் கூறிவிட்டு கீழே வந்தேன்; அங்கே எனது அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது. அறைக்கு வெளியே

www.thamizham.net - Free E Books No TM 14718

படித்துக் கொண்டிருந்த மாணவி கள் என்னைக் கண்டு திடீரென்று அறைக்குள் சென்று கதவைத் தா ழிட்டுக கொண்டனர். எல்லோரும் என்னைப் பைத்தியமாக்கிவிட்ட நிலை மை எண்ணி இதயம் நொந்தேன்; ஏங்கினேன். அந்த ஏக்கமே அழுகை யாக வெளி வந்து ஓலமிட்டது. என் ஓலக் குரலைக் கேட்ட காப்பாளர் கீழேயிறங்கி வந்தார். நான் தனி த்து நிற்பதையும் அறைக் கதவுகள் யாவும் பூட்டப் பட்டிருப்பதையும் கண்டு அதிர்ச்சியுற்ருர். அவர்

* கூச்சம் உள்ளவன் ஆபத்து வருவதற்கு முன் அஞ்சுவான். கோழை ஆபத்து வரும் போது அஞ்சுவான். துணிந்தவன் ஆப த்து வந்த பிறகு அஞ்சுவான். 'SPRING" —ரிச்டெர்.

என்னைச் சமாதானப்படுத்தி விட்டுப் பின்னர் மாணவிகளை அழைத்தார். ஆனல் ஒருவர் கூடக் கதவைத் திறக்கவில்லை. அவர் கோபங் கொ ண்டு செய்தியை முதல்வருக்குத் தெ ரியப்படுத்திஞர். சிறிது நேரத்தில் முதல்வரும் பேராசிரியை. ஒரு வரும் விடுதிக்கு வந்து என்னை அன் போடு அரவணைத்து ஆறுதல் கூறி ஞர்கள். பின்னர், முதல்வர் மாண விகளை அழைக்கவே அவர்கள் மெது வாகக் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்கள். முதல்வர் எனக்கு ஆறுதல் சொல்லி விட்டுச் சென்ருர். அன்றிரவு தமிழ்ப் பேரா சிரியை ஒருவருடன் தங்கியிருந்த நான், அழுது கொண்டேயிருந்தேன். நித்திரைதேவி என்னை எப்பொழுது அணைத்தாளோ தெரியாது. நடந்து முடிந்த இத்துயர நிகழ்ச்சியை எழு தும் பொழுது. இனம் புரியாத வே தனை தோன்றுகிறது. மனம் வேத னைக் குரலெழுப்பி ஓலமிடுகின்றது.

இந்நிகழ்ச்சி என் நெஞ்சில், ஓர் நீங்காத நினைவாக இருக்கின்றது.

—:—

LEADING BOOK SELLERS FOR SCHOOLS, & COLLEGES

THIRUMALAI STORES

(OPPOSITE - PANAGALPARK)
6, NAGESWARA RAO ROAD,
T. NAGAR, MADRAS-17.
PHONE: 441088

www.thamizham.net - Free E Books No TM 14718

கற்பனைக்கூடம்

பரிசு ; "பாரதியாரின் கவிதைகள்."

## "சிலம்புச் செல்வி கண்ணகியுடன்

## ஒரு கற்பனைப் பேட்டி!"



நான் சிலம்புச் செல்வி கண்ணகியை மதுரையிலுள்ள செல்லத்தம்மன் கோவிலில் கண்டு, அவர்களிடம் ஒரு சில பற்றிக் கேட்டவையும், கண்ணகியின் பதிலும்...)

கண்ணகியை வணங்கியவாறு சென்ற,

நான் : கண்ணகியே, சிலம்புச் செல்வி என்பதற்காகவா இப்படிச் சிலம்பைக் கையில் ஏந்தியவாறு நிற்கிறீர்கள்? வாருங்களேன், உட்கார்ந்து பேசலாம்...

கண் : நான் உட்கார மாட்டேன்

நான் ; ஏன்! எதுவும் வருத்தமா?

கண் : இல்லை, தலைவிதி.

நான் : நீங்கள் கொலைபட்ட கோவலனின் மனைவிதானே?

கண் : அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள்!

நான் : 'நெஞ்சம் மறப்பதில்லை' என்பது உங்களைப் பொறுத்த அளவில் உண்மை தானே!

கண் : இருக்கலாம்......

நான் ; அப்படியானல் உங்கள் கணவரை அநியாயமாகப் பலி வாங்கிய மதுரையில் இன்னும் இருக்கிறீர்களே?

www.thamizham.net - Free E Books No TM 14718

கண் : 'இன்னு செய்தாரை ஒறுத்து அவர் நாணநன்னயம் செய்வதற் காக? அல்ல.

நான் : மாதவியை இப்போது இங்கு கண்டால் என்ன செய்வீர்கள்?

கண் : வழக்குத் தொடரமாட்டேன்.

நான் : மதுரையில் உங்கள் கணவர் கொலை செய்யப்பட்டது கண்டு என்ன செய்தீர்கள்?

கண் : அதுதான் எல்லாருக்கும் தெரியுமே!

நான் : சிலப்பதிகாரத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கண் ; உங்களைப் பற்றி கதை இல்லையென்று...

நான் : இளங்கோவை நீங்கள் பார்த்த துண்டா?

கண் : பார்த்திருந்தால் சிலப்பதிகாரத்தை அரங்கேற்ற விட்டிருக்க மாட்டேன்.

நான் : சிலம்புச் செல்வரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்......

கண் : அவருக்கு நான் அப் பெயரை வைக்கவில்லை.

நான் : நீங்கள் 'கற்புக்கரசி' என்று நான் கூறுகிறேன்...

கண் : நான் சொன்னுல் நம்ப மாட்டீர்களே.....

நான் : சென்னை 'மெரீனு' கடலுக்குப் போயிருக்கிறீர்களா?

கண் : எதற்குத் தற்கொலை செய்து கொள்ளவா?.....

நான் : மெரீனு கடற்கரை ரோட்டின் மேலே உங்களுக்குச் சிலை வைத் திருக்கிருர்களே?

கண் : நான் இன்னும் பார்க்கவில்லை.

நான் : 'தமிழ் நாடு' அரசைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

கண் : எனக்குச் சிலை வைத்ததற்காகப் பாராட்ட விரும்பவில்லை.

நான் : ஜனாதிபதி தேர்தலைப் பற்றி உங்கள் முடிவு என்ன?

கண் . 'யார் வெற்றி பெறுவார்களோ? என்று நான் ஏங்கவில்லை.

நான் : அமெரிக்கர்கள் நிலவில் இறங்கி விட்டார்களே? நாமும்?...

கண் : கொம்புத் தேனுக்கு நாம் ஆசைப்படுவது தவறு.

நான் : நீங்களும் உங்கள் கணவரும் 1969ல் மதுரை வந்திருந்தால்...?

கண் : கொல்லப் பட்டிருக்க மாட்டார்...

நான் : உங்கள் கணவர் இப்போது உயிரோடு வந்து, 'சிலம்பை விற்று வியாபாரம் செய்வோமா?' என்ருல்...

கண் : கொடுக்க மாட்டேன்.

நான் , ஏன்?

கண் : இன்னுமொரு சிலப்பதிகாரம் ஏற்பட நான் விரும்பவில்லை.

நான் : நீங்கள் உங்களைப் பற்றிய சிலப்பதிகாரத்தைப் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?

கண் , நிறைய நடக்காத சம்பவங்கள் நிறைந்தது.

நான் : அப்படியானுல், உங்களது கருத்தைக் கூறிச் சிலப்பதிகாரத்தைப் 'பொய்க் கதை' என்று சொல்லட்டுமா?

www.thamizham.net - Free E Books No TM 14718

கண் : வேண்டாம்;

நான் : காரணம் என்ன?

கண் , நான் சொல்வதைக் கேட்டு உளறிக் 'கிறுக்குப் பட்டம்' வாங்க வேண்டாம்!

நான் : நீங்கள் தான் கண்ணகியாச்சே! நீங்கள் சொல்வது பொய் யாகுமா?

கண் : கண்ணகிதான்; ஆனல் சிலை உருவில் தானே...!

நான் : என்ன சிலை உருவிலா? நீங்கள் சிலையா...

கண் : ஆமாம், சிலையைப் பார்த்துத் தானே கேட்டுக் கொண்டிருகின்றீர் கள்!

(மெய் மறைந்து கண்ணகியின் சிலை முன்பு மேற் கண்டவாறு கேட்டுக் கொண்டிருந்ததை உணர்ந்து)

நான் : கண்ணகியாரே! சிலைக் கண்ணகியாரே! நான் பலவாறு கேட் டதுக்காகக் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?

('மாட்டேன்' என்பது போல் சிலை என்னைப் பார்த்துப் புன்முறு வலித்தது, போலத் தெரிந்தது)

பரிசு பெறுபவர் : கா. பரதன், இளவணிகவியில் இரண்டாமாண்டு
மதுரைக் கல்லூரி, மதுரை-11

அடுத்த இதழ் கற்பனைக் கூடத்திற்கான தலைப்பு :

**"இந்தியாவில் 100% படித்தவர்கள் என்ற நிலை வந்து விட்டால்......?"**

**பரிசு : திருக்குறள் தெளிவுரை (மு.வ.)**

முழுத்தாளில் 2 பக்கத்திற்குள் உங்கள் கற்பனை செல்கின்றபடி யெல்லாம் எழுதலாம். வந்து சேர வேண்டிய இறுதி நாள் 20-8-69.

## மனைவியும் கிணற்று நீரும்

மனைவி என்பவள் கிணற்று நீரைப் போல குளிராக இருக்கும் போது வெம்மையாகவும் — துன்பத்தில் இருக்கும் பொழுது கலகலப் பாகவும், வெம்மையாக இருக்கும் பொழுது தன்மையாகவும்—கோப மாக இருக்கும் பொழுது தணிவாகவும் இருக்க வேண்டும்.

—ரீத்தா

www.thamizham.net - Free E Books No TM 14718

# என்னைத் தெரியவில்லையா?

மாலை நேரம் வரப்போவதை மெல்ல உணர்த்துவது போல் கதிரவனின் கதிர்கள் மெல்ல தன் பொன் நிறத்தை இழந்து செந் நிறத்தை அடைந்து கொண்டிருந்தன. என் கால்கள் மெல்ல அந்த நீண்ட சாலையை கடந்து கொண்டிருக்கின்றன. சாலையில் கும்பல் வடிந்து கொண்டிருந்தது. சுற்றும் முற்றும் வேடிக்கை பார்த்துக் கொண்டே நடக்கிறேன் நான்.



திடீரென்று என் தோளை யாரோ பிடித்து நிறுத்துவது போன்ற உணர்வு. திடுக்கிட்டு திரும்பிப் பார்க்கிறேன் நான். இது என்ன? ஒருவரும் புலப்படவில்லையே. என் திகைப்பு சற்று நேரத்தில் வியப்பாக மாறுகிறது. உருவின்றி காற்றில், மிதந்து வந்து என்னை அழைத்த அந்த ஒலியே அதற்கு காரணம். சுற்றும் முற்றும் பார்த்து விழிக்கிறேன் நான். மறுபடியும் அழைக்கிறது குரல்.

"மேடம்! சற்று நில்லுங்கள். என்னைத் தெரியவில்லையா?"

"யார் நீ? ஒன்றும் தெரியவில்லையே!" கேள்விக்குறி என் முக பாவமாக மாறுகிறது.

'ஹஹ்ஹஹா!' சிரிக்கிறது 'குரல்.' "என்ன? புரியவில்லையா? உங்களுக்குள்ளும் உங்களை சுற்றியிருக்கும் ஒவ்வொன்றிலும் கலந்து இணைந்து நிற்கிறேனே என்னைத் தெரியவில்லையா?" அதன் குரலில் பெருமையும் ஏளனமும் கலந்து தொனிக்கிறது.

'ஒலி' என்னை மறுபடியும் அழைக்கிறது. "சரி மெல்ல என்னைத் தொடர்ந்து வாருங்கள் புரிய வைக்கிறேன் என்னைப்பற்றி." குரலில் ஏதோ ஒரு ஏக்கம்! தன்னைப்பற்றி நான் புரிந்து கொள்ளவில்லை என்ற தாபமோ? ஒலி எங்கு செல்கிறது என்று தெரியாமல் நிற்கும் என்னிடம் மறுபடியும் உத்தரவு பிறப்பிக்கிறது அது' "அதோ அங்கு பார்! ஒரு ஸ்கூட்டர் வருகிறதே!" திரும்பிப் பார்க்கிறேன். அத்திசையில், கோலைத் தழுவி நிற்கும் கொழுங்கொடியை நினைவு படுத்துவது போல் ஸ்கூட்டரை ஓட்டும் அந்த

www.thamizham.net - Free E Books No TM 14718

வாலிபனின் தோளில் முகம் புதைத்து செல்கிறது ஒரு 'பூஞ்சிட்டு'. முடிந்த அளவில் உடலை வெளிக்காட்டும் ஆடையும் உயர்ந்த கூந்தல் அலங்காரமும் செய்திருந்தாள் அவள். என்ன மேடம். என்ன பார்க்கிறீர்கள். இன்னும் எத்தனையோ விந்தைகள் நிகழப் போகின்றன. இவையெல்லாம் என்னால் தான்" "உன்னாலா?" வியப்புடன் கேட்கிறேன். 'அதோ அங்கே பார்!" திரும்பி பார்க்கிறேன் அங்கே.

அடடே! வருவது ஒரு கல்லூரி மாணவன் போலல்லவா இருக்கிறது கூர்ந்து கவனிக்கிறேன் நான். தன் பாக்கெட்டிலிருந்து எடுத்து உதடு

---



மனைவி : பக்கத்து வீட்டுக்காரரின் நாலாவது மனைவியும் இறந்துட்டாங்களே! நீங்க போய் துக்கம் விசாரித்து விட்டு வாங்கோ!

கணவன் : போடி! ஏற்கனவே மூன்று தடவை சென்று வந்தேன். நம்ம வீட்டிற்கு அவர் ஒரு தடவை கூட வராதபோது, நான் மட்டும் போக எனக்குக் கூச்சமாக இருக்கிறது.

— L. சிவாஜி

---

களுக்கிடையில் அலட்சியமாக செருகிக் கொண்ட சிகரெட்டை பற்ற வைக்க தீக்குச்சியை கிழிக்கிறான் மாணவன். 'த்சு!' தவறி விழுகிறது தீப்பெட்டி. குனிந்து எடுக்க முயற்சி செய்கிறான். பாவம்! முடியவில்லை.

"பையனுக்கு ஒன்றுமில்லை. அவன் அணிந்திருக்கிறானே டைட் பாண்ட் அதனால்தான் குனிய முடியவில்லை." குபீர் என்று சிரிக்கிறேன் நான். "இந்த மாதிரி 'ரவிக்·ஸ்லாக்.' டைட்ஸ் எல்லாம் கூட என் தூண்டுதலால்தான். அடடே என்ன இன்னும் விழிக்கிறாய்? இன்னுமா தெரியவில்லை நான் யாரென்று?" 'அது' தலையிலடித்துக் கொள்வது என் காதுகளுக்கு நன்றாக கேட்கிறது. "இல்லை... வந்து..." இழுக்கிறேன் நான்.

"சரி சரி! அதோ அங்கே தெரிகிறதே ஒரு கல்லூரி. அதன் அருகிலுள்ள பஸ் ஸ்டாப்பிற்கு போகலாம்." இழுத்துச் செல்கிறது என்னை. "அதோ பார்! ஒரு பஸ் வருகிறது ஏறிக் கொள்வோம்." அய்யய்யோ! மூச்சு திணறுகிறது எனக்கு. மாணவிகளும், மாணவர்களும் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஏறுகின்றனர். கண்டக்டர் 'ரைட்—ட்' என்று குஷியாக விசில் கொடுக்கிறார். அவர் முகத்தில்கூட இந்த மாணவ மாணவிகளைக் கண்டால் தான் எத்தனை மகிழ்ச்சி.

"ஏம்பா தம்பிகளா! உள்ளே போங்களேன்" —கண்டக்டரின் குரல். தபதப வென்று உட்புறமாக நுழைகின்றனர் மாணவ சிகாமணிகள். அதற்குள் நின்றிருந்த மாணவிகளின் தோள்களில் எத்தனை இடிப்பு; காதுகளில் கிசுகிசுப்பு. முகத்தை சுளுக்கிக் கொள்கின்றனர் மாணவிகள். ஒரு மாணவன் போகிற போக்கில் ஒரு மாணவியின் முகத்தோடு

www.thamizham.net - Free E Books No TM 14718

முகமாக 'டீ' கொடுத்து விட்டுப் போக அவள் 'நான்சென்ஸ்' என்று பூனைக்குரலில் கத்த ஐ ஆம் ஸாரி' என்று புன்னகை மாறாமல் அவன் மன்னிப்பு சாசனம் விடுக்க — இப்படியாக பலவகைப்பட்ட ரசனை மிகுந்த காட்சிகளை பார்த்து ரசித்த நான் வெறுப்புடன் அந்த மாணவர்களை நோக்குகிறேன். ஒலி என் காதில் கிசுகிசுக்கிறது. "பாவம்! பையன் என்னம்மா செய்வான் கண் சரியாக தெரியவில்லை."

இது என்ன பைத்தியம் போல் உளறுகிறது! "அவனுக்கு எப்படிம்மா கண்தெரியும்? அதான் முகத்தை கிராப்பு மறைச்சுக்கிட்டிருக்கே!" விழுந்து விழுந்து சிரிக்க வேண்டும்

---

## ஒரு விளம்பரப் பலகை.



*என்னிடம் ஒரு முறை நோயுடன் வந்தவர்களை மறுமுறை வருவதே இல்லை உடனே விரைந்து வருவீர்.

—எமராஜ் குமார். எம்.பி. பி எஸ்.

(மு.சு.தி.)

---

போல இருக்கிறது. பஸ் ஒரு வழியாக நிற்க அனைவரும் கீழே இறங்குகிறோம். 'அது' தொடர்கிறது. "மாணவனுக்கு கண் தெரியாமல் போவதற்கு காரணம் ஒழுங்காக அலங்காரம் செய்து கொள்ளத் தெரியாமல் போவது தானே!" கேலி சிரிப் | சிரிக்கிறது அது.

என்னைப் போன்ற ஒரு சக மாணவியைக் கேவலமாகப் பேசுகிறதே என்று (மாணவியான) நான் முகத்தை வெறுப்புடன் சுளிக்கிறேன்.

"சுத்த அதிகப் பிரசங்கியாக இருக்கிறாயே சீ! யார் நீ?" கோபத்துடன் கேட்கிறேன் நான்.

"ஹஹ்ஹா ஏளனம் அளவு கடந்து தொனிக்கிறது குரலில்"

"என்ன மேடம்! இன்னும் உங்களுக்கு புரியவில்லையே! எல்லோரையும் பற்றித்—தொத்திக் கொண்டிருக்கும் ஒரு வியாதி நான்." ஆகா! என்ன பெருமை அதன் குரலில்!

"வியாதியா?" திடுக்கிட்ட நான் அங்கிருந்து ஓட ஆரம்பிக்கிறேன். கத்துகிறது அது 'மேடம்! இன்னும் கொஞ்ச நாட்களில் எல்லோரையும் நான் முழு அளவில் பிடித்து விடுவேன். அறிஞர்கள் சொல்லிச் சென்ற ஆண் பெண் சம உரிமையை முழு அளவில் நிலைநாட்டப் போவது நான் தான்!"

'ஐய்யய்யே! இன்னும் என்னைத் தெரியவில்லையா நான் தான் மேடம்— நாகரீகம்! ஹஹ்ஹஹ்ஹா!" ஓங்காரமிட்டு சிரிக்கிறது அது. தொலைவில் ஓடிக் கொண்டிருக்கும் என் காதுகளில் அந்த சிரிப்பொலி வெகு நன்றாக விழுகிறது.

அனுப்பியவர்:

செல்வி; மதி

எஸ்.ஐ.இ.டி. மகளிர் கல்லூரி, சென்னை.

www.thamizham.net - Free E Books No TM 14718

# பூச்செண்டு

வழுவழுப்பான சாலையில் வெகு சொகுசாகச் சென்று கொண்டிருந்தது 'கார்'.

"ஆகா, ஆகா, என்ன சுகம்! 'காரென்றால் கேடிலாக் கார்' தான் கார்'. இதில் செல்லும் சுகத்தில் வேறு எதுவும் ஈடாகுமா என்ன தம்பி!, நீ என்ன செல்கிறாய்? என்று கேட்டது பூமாலை.

"இப்போது இந்த சுகத்தையும் அனுபவிக்க வேண்டியது தான்; நாளைக்குக் குப்பை வண்டியில் தூக்கி எறிவார்களே, அப்போது அதையும் அனுபவிக்க வேண்டியது தான்" என்றது பூச்செண்டு.

"என்ன தம்பீ! இத்தனைச் சிறு வயதில் இவ்வளவு விரக்தி உனக்கு?"—இது பூமாலை.

"நான் உன்னை விடச் சின்னவன் தான். ஆனாலும் என் சின்னக் கண்களைக் கொண்டு இந்த உலகத்தை நன்றாகப் பார்த்து விட்டேன்" என்றது பூச்செண்டு மேலும் தொடர்ந்து கூறத் தொடங்கியது. "இதெல்லாம் என்னுடைய செடித்தாய் கற்றுக் கொடுத்த பாடம் அண்ணா: நான் சின்ன குழந்தையாகவிருந்த பொழுதே, மலர்க்குழந்தாய்! இந்த உலகம் ரொம்பப் பொல்லாதது; இதில் போய் மாட்டிக் கொள்ளாதே; நாடகம் பார்ப்பதைப் போல எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிரு; ஆனால் அதிலிருந்து விலகியே இரு' என்று எச்சரிக்கை செய்திருக்கிறாள்"

"அப்படியானால் அந்த உலகத்தை எனக்கும் காட்டேன். தம்பீ! நீ சொல்லும் கருத்துக்களெல்லாம் எனக்குப் புதுமையாகவவே இருக்கின்றன. என்ன இருந்தாலும் நான் ரோஜாமாலை பங்களாவாசி; உன்னைப்போலப் பல இடங்களைப் பார்க்காதவன்." என்றது பூமாலை.

"அதற்கென்ன அண்ணா, கடினமேயில்லை. இதே, நம்பக்கத்தில் இருக்கிறாரே அருள்நாயகம், அவர் ஒரு பெரிய தொழிலதிபர். அவரை நீ பிடித்து விட்டால் போதும், உலகத்தையே படித்த மாதிரி தான்" என்றது பூச்செண்டு.

"ஓ. அவருக்கென்ன குறை? தம்பீ! அவர் தான் இன்று பொதுக் கூட்டத்தில் எவ்வளவு அழகாக தூய்மையாகப் பேசினார். பட பட வென்ற கை தட்டல்கள், அதைக் கேட்டு ஆனந்தத்தால் பொல பொல' வென்று என் மலரிதழ்களை

செல்வி. சீனி. கற்பகவாணி.
இளநிலை மருத்துவக் கல்லூரி.


www.thamizham.net - Free E Books No TM 14718

உதிர்த்தேனே!". இது பூமாலை சொன்னது. பூச்செண்டு இலேசாகப் புன்னகைத்தது,

கடற்கரைச் சாலையில் சென்று கொண்டிருந்தது கார். மொழிக்கும் நாட்டிற்கும் உழைத்த பெரியார்களின் சிலைகளைக் கடந்து சென்று கொண்டிருந்தது. "எவனெவனுக்கோ, சிலை வைக்கிருன்.

"என்ன அண்ணு! இதற்கா இத்தனை திகைப்பு?" என்றது பூச்செண்டு. இதற்குள் காரும் ஒரு பெரிய பங்களாவுக்குள் நுழைந்தது. காரின் கதவைத் திறந்து சலாமடித்த வேலைக்காரனிடம், "இந்த மாலையையும் பூச்செண்டையும் கொண்டு போய் என் ரூமில்வை" என்று உத்தரவிட்டார் அருள்நாயகம்.

அறையில் தனியே விடப்பட்ட



நான் தலைகீழாக நின்று பார்க்கிறேன் நம்ப சிலையை. நம்ப தொழிற்சாலையிலே கூட வைக்க மாட்டேங்கருன். இருக்கட்டும், இருக்கட்டும், இதை இப்படியே விட்டிடுவேனு! 'என்று அருள் நாயகம் உதிர்த்த மொழிகள் பூமாலையின் காதுகளில் விழவும் அது திடுக்கிட்டது.

பூமாலையும் பூச்செண்டும் விழிவிரிய அவ்வறையின் சிறப்புக்களைப் பார்த்துக் கொண்டே இருந்தன. "தம்பீ! பார்த்தாயா, என்ன அழகான அறை! எல்லாம் பார்க்கப் பார்க்கப் பரவசமே." என்றது பூமாலை.

"ஆமாம்மாம், தேவைக்கதிகமாகப் பொருள் சேர்ப்பது திருடாகும்

www.thamizham.net - Free E Books No TM 14718

என்று கூறிய காந்தியடிகளைப் பின்பற்றுபவர் வீடு இப்படித்தான்'' என்று நகைத்தது பூச்செண்டு.

இதற்குள் அருள்நாயகமே அங்கு வந்தார். அவர் கையில் ஒரு கோப்பையும் புட்டியும். புட்டியிலிருந்ததைக் கோப்பையில் ஊற்றினார். கோப்பையில் இருந்ததை வாயில் ஊற்றினார். அப்போது சுவரிலிருந்த காந்தியடிகளின் படம் அவரைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்ததோ என்னவோ, திரும்பி அமர்ந்து கொண்டார். அவர் திரும்புவதை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்த பூமாலை கேட்டது - தம்பீ! இவர் என்ன குடிக்கிறார்.''

"உன் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறதே'' அண்ணா மது அரக்கன் இந்தத் தொண்டரை மாத்திரம் விட்டு வைப்பானா? பகற் பொழுதில் 'மது அரக்கன் ஒழிக' என்று கூச்சலிட்டுப் பேசி வருபவர்களை இரவில் அவ்வரக்கன் நன்றாக எப்படிப் பழி தீர்த்துக் கொள்ளுகிறான். பார்த்தாயா? '' என்று பதில் கூறியது பூச்செண்டு.''

---

## டுடோரியல் வாசல்.




*** மாணவர்களே! எங்கள் டுடோரியலில் சேர்ந்து தொடர்ந்து தேர்வு எழுதி வந்தால், நிச்சயம் (என்றாவது ஒரு நாள்) வெற்றி பெறுவீர்கள்! விரைந்து வருக!**

**"கோவிந்தா டுடோரியல்ஸ்"**

(மு.சு.தி.)

---

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. அவசர அவசரமாகக் கோப்பையை அலமாரியில் பதுக்கினார் அருள் நாயகம். பின் கதவைத் திறந்தார். "என்ன முனியா: என்ன சேதி? இந்த நேரத்தில் எதற்காக வந்தாய்?'' என்று உறுமினார்,

" ஐயா, மன்னிச்சுக்கணுங்க. தொழிற் சங்கத் தலைவர் சங்கர் உங்களைப் பார்க்க வந்திருக்காருங்க.'' என்றான் முனியன்.

"ஆமாம் மறந்தே போச்சு; வரச் சொல்லு, அவனை.'' என்றார். "வணக்கம், ஐயா! வரச் சொன்னீர்களாமே?'' என்றான் உள்ளே வந்த இளைஞன். "ஆமாம், சங்கர் உன்னிடம் ஓர் இரகசியமான செய்தி பேச வேண்டும். அது என்னவென்று உனக்கே தெரியும். எல்லாம் இந்தச் சம்பள உயர்வு விஷயந்தான்.'' என்றார் அருள் நாயகம்.

"இதில் என்னைக் கேட்க என்ன ஐயா இருக்கிறது? தீர்மானம் செய்தவர்கள் தொழிலாளிகள். அவர்களும் இந்த முறை அநியாயமாக ஒன்றும் கேட்கவில்லை. இத்தனை ஆண்டுகள் பாடுபட்டதற்குப் பலனைத் தானே கேட்கிறோம்? கம்பெனிக்குப் பெரிய அளவில் இலாபம் குவிந்திருக்கும் போது எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடாதா, ஐயா?''

"எனக்கு எல்லாம் தெரியும். தொழிலாளிகளை ஆட்டி வைக்கிறேன் நீ.

www.thamizham.net - Free E Books No TM 14718

ஒரு தரம் நீ வாய் திறந்து சம்பள உயர்வு வேண்டாம்னு சொல்லிவிடு. சும்மா ஒண்ணும் சொல்ல வேண்டாம், இதோ பார்!" என்று நோட்டுக் கத்தைகளை அள்ளி வீசினார்.

"ஐயா இந்த மாதிரி சங்கத் தலைவர்களுக்குத் தருகிற பணத்தைச் சம்பள உயர்வாகத் தந்தால் என்ன? பணத்தால் எல்லோரையும் விலைக்கு வாங்க முடியாது. நான் வருகிறேன்" என்று விரைவாக வெளியே நடந்தான்.

"நேற்றுப் பிறந்த பயலே! காந்திக்கு வாரிசாடா நீ? உன்னை மாதிரி எத்தனை பேரை என் ஆயுசில் பார்த்திருக்கேன்-என் கிட்டேயா வாலாட்டறே?" என்று அருள் நாயகம் உறுமியது அவன் காதுகளில் விழவில்லை.

உடனே அருள் நாயகம் போனை' எடுத்து பேசினார் - "ஹலோ! யார், இன்ஸ்பெக்ட்டரா? தொழிலாளர் சங்கத் தலைவர் சங்கரை உங்களுக்குத் தெரியுமே! அவன் அவனுடைய சங்கத் தொழிலாளர்களுடன் வந்து மிரட்டி ஆயிரம் ரூபாய் பணத்தை பலவந்தமாகக் கொடுக்கும் படிச் செய்து விட்டான். உடனே நடவடிக்கை எடுங்கள்"

பூமாலைக்கு ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. "என்ன இருந்தாலும் அந்தப் பையன் இத்தனை பைத்தியமாக இருந்திருக்கக் கூடாது. யார் எப்படிப் போனாலென்ன? கொடுத்ததை வாங்கிக் கொண்டு, வம்பில் மாட்டிக் கொள்ளாமல், குஷியாக இருந்திருக்கலாமே!" என்றது.

"ரொம்ப அழகாக இருக்கிறது, அண்ணா, நீ பேசுவது சரி. நேரமாகி விட்டது. இன்னும் கொஞ்ச நேரந்தான உல்லாச மாளிகையின் சுகம் தூங்கு, தூங்கு" என்றது பூச்செண்டு. ஆனால் மறுநாளும் அவை அம் மாளிகையிலேயே இருந்தன. அதனால், அம்மாளிகையில் போலீஸ் ஜவான்களும், மற்றச் சில போலீஸ் அதிகாரிகளும் வந்து போய்க்கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தன.

---

## ஒரு பவுடர் விளம்பரம்



ப்ரேம் பவுடர்

✻ எங்கள் பவுடரை பூசிக் கொண்டால், 40 வயதுள்ளவர்களும் 18 வயதே ஆனவர்களாகத் தெரிவார்கள். வேண்டுமானால் பிரபல நடிகை குமாரி கோகிலாவைக் கேட்டுப் பாருங்கள்!"

மு. சு. தியாகராசன்.

---

அதற்கு அடுத்த நாள் கண் விழித்த பூமாலை, தான் புதிய இடத்தில் வந்திருப்பதை உணர்ந்தது. "செண்டே! எங்கே போய் விட்டாய்?" என்று உரக்கக் கத்தியது.

"உஷ்! ஏன் கத்துகிறாய்? இங்கேதான் உன் பக்கத்திலேயே இருக்கிறேன்" என்றது பூச்செண்டு.

"ஓஹோ! இங்கேயா இருக்கிறாய்? இது என்ன மோசமான இடம்? கண்ணே தெரியவில்லையே!

www.thamizham.net - Free E Books No TM 14718

"இது தான் நம்மைப் போன்ற பூக்களின் குப்பைத் தொட்டி"— என்றது பூச்செண்டு.

"தம்பி, அதோ இருவர் வருகிறார்களே, யாரது?"

"அவர்கள் தான் நம்மை எடுத்துச் செல்லும் நகர சுத்தியாளர்கள்."

இதற்குள் அவ்விரு தொழிலாளிகளும் தம் வேலையைத் தொடங்கி விட்டனர். "ஜிவ்' வென்று ஆகாயத்தில், பறப்பது போலிருந்தது பூமாலைக்கு. கண் விழித்துப் பார்த்தால் ஒரு குப்பை வண்டியின் உச்சியில் சுகமாக அமர்ந்திருந்தது. தற்செயலாகத் தம்பி பூச்செண்டும் அதன் அருகில் வந்து விழுந்தது. 'கட கட' என்ற இரைச்சலுடன் வண்டி ஓடத் தொடங்கியது,

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

*** ஆணுக்கு உலகமெல்லாம் வீடு. பெண்ணுக்கு வீடுதான் உலகம். கோயிலுக்கு வெளியே வந்து விழுந்து விட்டால் தெய்வமும் கல்லாகி விடும்.**

(காண்டேகர்)

—குமரி இதயன்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

"தம்பி! அந்தக் கார் பயணத்தை விட இந்த வண்டிப் பயணம் நன்றாக விருக்கிறதே!" என்றது பூமாலை.

"அது இந்த மனிதர்களுக்குத் தெரியவில்லையே அண்ணா!"

இதற்குள் வண்டியோட்டி வந்த இரண்டு பேரும் வண்டியை விட்டு இறங்கிச் சென்றனர். திரும்பி வந்தவர்கள் கையில் ஒரு தினசரி இருந்தது.

"அண்ணே இன்னிக்கு என்ன ந்யூஸ்? படி கேக்கலாம்." என்றான் ஒருவன்

"படாந்யூஸ் ஒண்ணு இருக்கு தம்பி! கேளு!"

"பரபரப் பூட்டும் செய்தி!"

"சென்னை அடையாறில் பயங்கரக் கொள்ளை!

தொழிலதிபர் அருள் நாயகம்அவர்கள் அடையாறில் வசிப்பது அனைவருக்கும் தெரிந்ததே நேற்று பட்டப்பகலில் அவர் வீட்டில் பயங்கரக் கொள்ளை நடக்க விருந்தது. முகமூடியணிந்த இருவர் அருள் நாயகத்தின் பங்களாவிற்குள் நுழைந்து கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி பணம் பறித்தார்கள். சமயத்தில் அருள் நாயகம் போலீஸுக்குப் போன்' செய்துவிட்டார். போலீஸார் திருடர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப் பட்ட இருவர்-சங்கர் (வயது 25) தொழிற் சங்கத்தலைவர் (2) கணேஷ் (வயது 26) சங்கரின் நண்பர். அவர்களது நோக்கம் அருள் நாயகத்தை பழிவாங்குவதேயென்றும். அருள் நாயகத்துடன் நடந்த வாக்கு வாதத்தில், ஏற்பட்ட தகராறின் விளைவே என்பதும் தெரிய வருகின்றது. போலீஸார் விசாரணை நடத்துகின்றனர்." என்று தினசரியிலுள்ள செய்தியைப் படித்து முடித்தான்.

"அடப்பாவி! அந்தப் பாவி அருள் நாயகத்துக் கிட்டேவசமா மாட்டிக்கிட்டானே இனிமே சங்கரையும் அவன் சினேகிதனையும் தீட்டிட மாட்டாங்களா, தீட்டி!" என்றான் மற்றொரு தொழிலாளி.

www.thamizham.net - Free E Books No TM 14718

"அண்ணு, கேட்டாயா. சேதிகளை! நாம் அவர்கூட அங்கே இருந்ததால் நமக்கு உண்மையானகதைதெரியும். நீதிக்காகப் பாடுபட்டவர் நிலையெல்லாம் இது தானண்ணு! நஞ்சு மிழும் நாகமாக இருப்போர் தான் நாட்டிலே அதிகமாக இருக்கிருர்கள். இப்போது புரிந்ததா உலகம்?" என்று கேட்டது பூச்செண்டு.

"நன்ருகப் புரிந்து விட்டது தம்பி! போதும் போதும், நினைத்தாலே நெஞ்சு சுடுகிறதே!', என்றது பூமாலை "இந்த மனிதப்பிறவியே வேண்டாம் அண்ணு அடுத்த பிறவியிலாவது இறைவனடியை அலங்கரிக்கும் பேறு பெற இறைவனை வேண்டிக் கொள்ளுவோம்" என்று சொல்லிக் கொண்டே பூச்செண்டும் பூமாலையும் தம்முடைய கண்களை மூடிக் கொண்டன. சில விளுடிகளில் அந்த வண்டி, மலர்களை ஒரு குழியில் தடாலென்று சாய்த்தது பூமாலையும் பூச்செண்டும் அப்பொழுதே இறைவனடியை அலங்கரித்த மன நிறைவோடு கண்களை மூடிக் கொண்டு ஆழ்ந்த துயிலிலாழ்ந்தன.

—:—

## காணவில்லை !

* வயது—18. நிறம்—சிவப்பு. ஒல்லியான உருவம். உயரம் 5 அடி பெயர் குமார்.

அன்புள்ள குமாருக்கு—நீ காணுமல் போனது முதல் வீட்டில் எல்லோரும் சந்தோஷமாக இருக்கிருர்கள். நீ வீட்டிற்கு திரும்பி வந்து விடுவாயோ என்று பயந்து நாங்கள் யாரிடமும் சொல்லாமல் வேறு ஊருக்குப் போகிருேம். நீ இந்தச் செய்தியை படிக்கும் போது நாங்கள் ரெயிலில் சென்றுக் கொண்டிருப்போம்

என்றும் மறவாத
உன் தந்தை.

—தியாகுராசன்.



## திருமணம்.

செல்வன் : புஷ்பராஜ் B.Sc., Bet க்கும் செல்வி : எல்ஸிக்கும் சென்ற திங்கள் திருமணம், சிறப்பாக நடை பெற்றது.

வாழ்க மணமக்கள்.

# தென்றல் ஓசம்

**12** **நிழற்படத் தொடர் கதை**

படப்பிடிப்பிலும், உட்கார்ந்து எழுதும் போதும் ஓய்வு நேரத்திலும், அப்புறம் அந்தக்கேள்வி திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தது. ஒத்திகைக்கு ஒரே பாட்டை ஸ்டுடியோவில் மீண்டும், மீண்டும் வைக்க கேட்பதைப் போல. அது எழுப்பிய யோசனையின் படலங்கள் அவனை முடுக்கையில் பேச்சும் செயலும் மறந்து போகும்.

அன்று அவனால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. ஒரு செய்கையின் அடையாளத்தில் ஆறுதலை உணர்த்துவதைப்போல அவள் தோள் மேல் விரல் பரிவாய் அழுந்தி நின்றதோடு சரி. அவள் உடல் அதையும் ஏற்காமல் குலுங்கிற்று. அலர்ந்த இதழைப் போல. அவள் அவனுடைய அணைப்பிலிருந்து நழுவி விட்டாள். அவன் சொல்ல முடியாத பதில் அவனுடைய மௌன வேதனை, அவள் மார்பில் ஈட்டியாய் செருகி நின்றதை அவன் உணர்ந்தான்.

ராதை சொன்னது உண்மையே அல்லவா?

எங்கு சென்றாலும் நளினியின் நினைவுதான் நிழல் போல அவனைத் தொடர்ந்தது இப்போதெல்லாம். அவளுடைய பார்வையும், அருவியின் கலகலப்பாய் பேச்சும் மனத்துக்குப் பழகி விட்டன. எப்பொழுதேனும் அவன் கை மீது பட்ட அவள் விரல்களின் உணர்வு நெஞ்சில் புலரும் போதெல்லாம் தன்மையாய் பனித்துளிகளை வாரி இறைப்பது போல இருந்தது.

அவள் ராதையைப் போல கிராமத்துப் பெண் அல்ல; அவளுக்கு நாகரீகமும் நயமும் கை வந்த கலைகள், அவள் ராதையைப் போல உணர்ச்சிகளைக் கொட்டமாட்டாள்; லயம் பிசகாமல் நடிப்பின் போர்வையில் அவைகளை அடக்கி அழகாக வெளியிடத் தெரியும் அவளுக்கு. அவள் சந்திப்பு வெறும் பேச்சுடன் நிற்காது; பேச்சில், அவன் பேச்சையும் சாமர்த்தியத்தையும், நுட்பமாய் வியந்து தேனாய் இனிக்கச் சொல்லும் வித்தை அவளுக்குத் தெரியும்.

அவை மட்டும் தானா?

ஒன்று அவனுக்காகவே தன்னை ஈந்து, அந்த அர்ப்பணத்தில் தன்

---

**எஸ். லட்சுமி சுப்பிரமணியம்**

www.thamizham.net - Free E Books No TM 14718

மெருகையும் மணத்தையும் உதிர்த்து விட்ட மலர். இன்றொன்று ஒளி விட்டு மிளிர்ந்து இன்ப மணத்தை தன்னுள் அழகிய புதிராய்த் தாங்கிக் கொண்டு நிற்கும் மலர். ராதை இரவில் பூக்கும், இரகசியமாய் தனக்குத்தானே பூத்துக் கொள்ளும் மலர். தொட்டாலே நலுங்கிவிடும் இதழ்கள் கண் பார்வையிலேயே கசங்கிவிடும் இதழ்கள், நெஞ்சின் சிறு வேதனையில் நைந்து விடும் இதழ்கள், அந்த மலருக்கு உரியவை. நளினாவின் தோகை விரிக்கும் அழகு. அதில் தலை நிமிரும் தனிக்கம்பீரம் ராதைக்கு வர முடியாது. மாலை மேல் சுற்றிய ஜரிகை நூல் போல, கவர்ந்து தன் புறமாய் இழுக்கும் அந்த இளமையின் கவர்ச்சி தனியானது தான்.

சுந்தரம் இப்போது வாரத்துக்கு ஒரு முறை கூட வீட்டுக்குப் போவதில்லை. ஸ்டுடியோவிலேயே அவனுடைய உபயோகத்துக்கு இடம் ஒதுக்கிஇருந்தார்கள். அருகாமையிலேயே அவன் ஒரு அறையைத் தேடிக் கொண்டான். ஒரு தனி மனிதனுக்கு வேண்டிய தேவைகள் அனைத்தும் அதில் இருந்தன. படுக்கை, மின் விசிறி குளியல் வசதி, சாப்பாட்டு வசதி—எதற்கும் குறையில்லை.

ஸ்டுடியோவிலேயே நெடு நேரம் பொழுது போக்கிவிட்டுத் திரும்புவான். கூட்டமும் இரைச்சலும் அடங்கி, தனிமையையும் நிம்மதியையும் தேடிக்கொண்டு வருவான். வெளிச்சமும் மேடையுமாக இருந்த வட்டத்தை விட்டு விலகி, அங்கே இருளின் ஒதுக்கத்தை நாடி வருவான். வாசல் வரை நளினாவின் குரல் துணை வந்து விட்டு விடை பெற்றுக் கொண்டு போகும். அப்புறம் இமைகள் அழுத்திய உறக்கத்தில், அந்தக் கனவுகள் மலர்ந்து கொண்டு நிற்கும்.

மெல்லிசை போலக் கேட்கும் அந்தக் குரல். அதிகமாக, அசைவும் கூட இல்லாத முக உணர்ச்சி. கண்ணிலும் புருவத்திலும் உதட்டிலும் தெரியும், பின்னணியாக நின்ற வியப்பின் அழகு. சாலை நீல விளக்கொளியின் நெடிய மங்கலில் மென்மையாகத் தெரியும் உருவம் போல, அவனுக்குப் புலனாகி நின்ற அந்த மன நெருக்கம்.

---



கேள்வி

## ஒரு புதிர்!


இந்தப் பெண்ணின் கரம் பிடித்திருப்பது என்ன?

(அ) கைக்குட்டை (ஆ) கைப்பை
(இ) பேப்பர் (ஈ) பிளாஸ்டிக் டப்பா

உங்கள் ஊகத்தை சரி பார்க்க 46 ம் பக்கத்தைப் புரட்டுங்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14718

நள்ளிரவுக்கு மேல் சட்டென்று விழித்துக் கொள்வான். நெஞ்சில் கனிந்த சூட்டிலும் வேதனையிலும் அந்த ஒலி தொலைவில் கேட்டு நிற்கும். உள்ளத்தின் தொடுவானத்தில் கேட்பது போல அந்த அருவிச் சிரிப்பின் சப்தம் சலசலத்து மறையும். பின் நிலவின் ஒளியில் தேங்கிக் கனத்து நின்ற அமைதியில், மனத்தளவில் அந்த உருவத்தின்



மீது அவன் கண்கள் மீண்டும் மீண்டும் அலைபாயும். கற்பனையில் அந்தக் கை விரல்களைப் பற்றி மார்பின் மீது வைத்துக் கொள்வான்.

நளினுவுடன் பேசும் போது, அவனுடைய திறனை வியந்து அவன் ஏதேனும் சொல்ல வரும் போது, அவன் பார்வையில் அந்த தாகத்தை அவள் அடையாளம் கண்டு கொள்வதுண்டு. உடம்புக்கு ஆகாத திண்பண்டத்தை குழந்தையின் கண் பார்வையிலிருந்து மறைப்பது போல, சட்டென்று தன் உணர்ச்சிகளைப் போர்த்து மூடிக் கொண்டு விலகி விடுவாள். அவளுடைய எண்ணங்கள் சட்டென்று வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கு வந்ததும் மறையும் நிழலைப் போல, உருவழிந்து போகும்.

அவன் எழுதிய வசனங்களை அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவனையே படிக்கச் சொல்லி கேட்பாள். அவனுடைய குரலில் தடுமாறும் உணர்ச்சிகளை, இசையின் நயத்தை நுட்பமாய் அனுபவிப்பது போலத் தனக்குள் அனுபவித்துக் கொண்டு அமர்ந்திருப்பாள்.

நடிக்கும் போது அவளுக்குத் தன் சூழ் நிலை மறந்துபோகும். அவன் சற்றுத் தள்ளி நின்று, அவள் தான் எழுதிய வசனங்களை உணர்ச்சி ததும்பப் பேசுவதை மனம் அழுந்தக் கேட்டுக் கொண்டிருப்பான். குரலைத் தாழ்த்தி நெஞ்சைக் கண்களின் ஜன்னல்களில் நிறுத்தி அவள் பேசும் போது அவன் மனத்தில் ஒரு தவிப்பு எழுந்து அடங்கும். நிலவின் வெள்ளி ஒளியில் கை நிறைய மல்லிகையை எடுத்து மூக்கில் அழுந்த வைத்துக் கொண்டதைப் போன்ற ஒரு நினைவு மணம் அவனை மயக்கி வாட்டும்.

'செட்'டில் வேலை முடிந்ததும் நேரே அவனிடம் வந்து விடுவாள் அவள் நடித்தது எப்படி இருந்தது என்று கேட்பதற்கு. பேசு முன்பே

www.thamizham.net - Free E Books No TM 14718

அவள் புன்னகை இதழ் விரிக்கும். அந்த மன அண்மையும் வெளிப்படையான பழக்கமும் அவ்வளவு நேர் முன்னிலையில் சிலசமயம் கூச்சமாகக் கூட இருக்கும் அவனுக்கு.

நாலைந்து வெற்றிப் படங்களுக்குப் பிறகு தயாராகி வந்த வண்ணப் படம் அது. அதன் படப் பிடிப்புக்காக முக்கியமான நடிக நடிகையருடன் அவனும் காஷ்மீருக்குச் செல்வதாக இருந்தது. புறப்படுவதற்குத் தயார் செய்து கொள்வதற்கு ராதையிடம் சொல்லிக் கொண்டு வருவதற்கு சுந்தரம் வீட்டுக்குப் போயிருந்தான்.

வீடு 'கல்' என்று இருந்தது. மணி பள்ளிக்கூடத்துக்குப் போய் விட்டான். குழந்தை விளையாடிய அலுப்பில் தூங்கி விட்டாள். ராதை பின்கட்டில் வேலையாக இருந்திருக்க வேண்டும். முன் புறம் ஆளரவம் கேட்டதும் அவள் காலடி முன்னால் மெல்ல நடந்து வந்தது.

நிலை வாசற்படி வரைக்கும் வந்தவள், அவனைக் கண்டதும் அப்படியே மேலே அடி பெயராமல் நின்று விட்டாள். ஒரு கணம் அவள் பார்வையைச் சந்தித்து கூசினாற் போல முகத்தைத் திருப்பிக் கொண்டான் சுந்தரம்.

எண்ணெய்க் குளியின் ஈரம் அடங்க ஆற்றிய கூந்தல். காதிலும் மூக்கிலும் மருந்துக்கும் அவள் நகை அணியவில்லை. புருவத்தின் அகல் வளைவில் கீறிய சாந்திலிருந்து சுடராய் எழுந்த குங்குமம். ஆர்வத்தில் எழுந்து அடங்கிய கண்கள் திரி தூண்டியதும் ஒளி படர்ந்து அடங்கும் விளக்குக்கொழுந்தென மின்னின. வட்டமாய் சுழன்று அமர்ந்த பார்வை நிலைத்ததும் கையைக் கூப்பி விரல்களைப் பின்னிக் கொண்டாள்.

'படப் பிடிப்புக்காகக் காஷ்மீர் வரை போகிறேன் சொல்லிக் கொண்டு போக வந்தேன்.''

அவள் பார்வை நிதானமாய் உயர்ந்து சிந்தித்தது.


'நினைத்தேன்—''

''என்னவென்று?''

'போவதைச் சொல்லிக் கொள்வதற்குத்தான் வருவீர்களென்று''—

அவன் மளமள வென்று தன் அறைக்குப் போய் விட்டான். துணிகளை அடுக்கும் பெட்டியை உதறும், செருப்புகள் அசையும் சப்தம் பின்னணியாகக் கேட்டது; அவன் அவசரமும் அமைதி இன்மையும் தெரிவதைப் போல. கீழே அவன் இறங்கி

**44ம் பக்கத்தில் இந்தப் பெண்ணின் கரம் பிடித்திருப்பது என்ன? விடை:**



அது ஒரு பெண்ணின் கைப்பையோ, கைக்குட்டையோ இல்லை. அது ஒரு இசைத்தட்டு. பார்ப்பதற்கு ஒரு சாதாரண பிளாஸ்டிக் பேப்பரைப் போல் காட்சியளிக்கும் இதன் நான்கு மூலைகளையும் ஒரு சதுர அட்டையில் ஒட்டிக் கொண்டு இசைத்தட்டாக பயன் படுத்தலாம். தபாலில் எளிதாக அனுப்புவதற்காக அமெரிக்காவில் இப்படி செய்கிறார்கள். படத்தில் காணும் இசைத் தட்டின் வேகம் 33⅓ R.P.M. இந்த இசைத் தட்டில் சேவையையே இலட்சியமாகக் கொண்ட Y's M n's International என்ற கழகத்தின் அகில உலகத் தலைவர், அதன் உறுப்பினர்களுக்கு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்துச்செய்தி பதிவாகியுள்ளது. தகவலும் புகைப்படமும்: 'எழில்.' தூத்துக்குடி.

www.thamizham.net - Free E Books No TM 14718

வந்த போது அவள் காத்துக் கொண்டிருந்தாள்.

"சாப்பிட்டு விட்டுப் போங்களேன்—"

"எனக்குப் பசி இல்லை. "கைப் பெட்டியை மேஜை மீது வைத்து விட்டு யோசனையாய் நின்முன். கால் செருப்பு வழவழ வென்ற தரையில் தாளமிட்டது.

கொஞ்சம் இருங்கள். மணி பள்ளிகூடத்திலிருந்து வந்து விடுவான். வெகு நாட்களாக. உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிமுன்."

சுந்தரம் மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்துக்கொண்டான் "இல்லை. எனக்கு நேரமாயிற்று. வந்தால் அவனிடம் சொல்லி விடு."

டிரைவர் உள்ளே வந்து படுக்கையையும் பெட்டியையும் எடுத்துக் கொண்டு போனன். மறுபடியும் அவளிடம் சொல்லிக் கொள்ள அவனுக்கு என்னவோ போல இருந்தது. அவளைப் பார்க்கும் போது பூக்களும் இலைகளும் உதிர்ந்து கொண்டிருக்கும் செடியின் ஞாபகம்தான் வந்தது அவனுக்கு. அந்த வெறுமைக்கு யார் காரணம்?

காரில் அமர்ந்த பிறகு வாசற்புறம் திரும்பினன். ராதை வெளியே வந்து வழியனுப்பவில்லை அவனுக்குத் தெரியும்; ராதை கண் கலங்கி உள்ளேயே நின்றிருப்பாள். ஆனலும் அவள் தன் மன நெகிழ்ச்சியை ஒரு பலவீனமாய் அவனுக்கு வெளிக்காட்ட மாட்டாள்.

வழி நெடுக அந்த ஞாபகமாகவே இருந்தது. நாற்காலியில் உட்கார்ந்து, சோர்வில் மூழ்கியவளாய் கண்ணைமூடி அமர்ந்திருக்கும் ராதை. பள்ளிக் கூடத்திலிருந்து வந்ததும் அவளைச் சுற்றி வந்து கையை இழுத்துப் பேச முயலும் மணி.

'அம்மா. அம்மா."

அவள் நெற்றிப்பொட்டு கொதிக்கிறது. அவனுக்கு அவள் பதில் அளிக்கவில்லை. மடித்தகைகளின் மேல் தலையைக் கவிழ்த்தபடி விக்கி விக்கி அழுது கொண்டிருக்கிறுள். பேசாமல் மணியை இழுத்துத் தன் புறமாய் அணைத்துக் கொள்ளுகிறுள்...

அவள் சொல்ல மாட்டாள் மணியிடம்; அப்பா வந்து அவனைப் பார்க்கப் பொறுமை இல்லாமல் திரும்பி விட்டார் என்று.

இயற்கையின் எழில் போர்வை பசுமையாய் வண்ணவண்ணப் படுதாக்களாய் நலுங்கும் காஷ்மீர்.

அங்கு வந்ததிலிருந்தே சுந்தரம். தனக்குத் திடீரெனப் புது விதமாய் கண்கள் திறந்ததைப்போல உணர்ந்தான். பொன்னிறமாய் வெள்ளையும் கறுப்புமாய் நீண்ட ஊதா நிற வாலுடன்கூடியதாய் மிளகாய் பழம் போலச் சிட்டாய், பல குரல்களில் கூவிக் கொண்டு பறந்த புள்ளினங்கள் அவன் மனத்தின் கிளர்ச்சியையே நிழலிடுவன போலத் தோன்றின.

வழியெங்கும் நிலத்தின் பசுமைக்கு நடுவே வண்ணங்களின் கலவையாய் பூத்துச் சொரிந்த மலர்ச்செடிகள். ஒரு கணமேனும் நின்று, நடந்து மேலே போகு முன் வியந்து பாராட்டி விட்டுப்போகத்தூண்டும் விதமாய்த் தலையசைக்கும் பல நிறப்பூக்கள் கருமலைகளின் மடியில் தன்னிரு பக்கங்களிலும் வளைவுகளைக் கற்பித்துக் கொண்டு விரிந்து கண்ணுடித் தகடாய் பிதுங்கி நின்ற ஏரிகள்.

கடைத்தெருவில் டோங்கா'வில் அமர்ந்து செல்லும் போது இப்புறமும் தெரிந்த காட்சிகளில் நளினுவின் முகத்தில் குழந்தையின் வியப்பாய் இரகசிய ஒளி வீசிற்று. இப்புறமும் சரிந்த ஓட்டுக் கூரை வீடுகள். அடர்ந்த கம்பளிக்குல்லாயும் கோட்டும் அணிந்து செல்லும் ஆண்கள் பளிச் சென்ற வர்ண உடைகளும் முகத்திரையுமாக. பெரிய பூக்கள் நகர்ந்து செல்வது போலத் தோற்றமளித்த பெண்கள்.

கடைகளில் நுழைந்து விட்டால் நளினுவுக்குப் பொழுது போவதே

www.thamizham.net - Free E Books No TM 14718

CLEARANCE SALE
of
TEXTILES & READYMADES
UP-TO 50% DISCOUNT
TILL 15th AUGST
AT

SATGURU

63, USMAN ROAD,
T. NAGAR, MADRAS-17.

தெரியாது. மரத்தில் குடைந்து உருவாக்கிய பொம்மைகள், நேர்த்தியாகப் பூவேலை செய்த கம்பளிகள். வெள்ளி நகைகள், வண்ணமாய் பூக்கள் பொரித்த தோல் பைகள் இவைகளுக்கு நடுவே கிளுக்' கென்ற சிரிப்பு அவள் திக்கிலிருந்து ஒலித்துக் கொண்டிருக்கும். மரத்திலிருந்து நேரே உதிரும் மலரைப் போலத் தோன்றும்; அவள் கைகளைக் கோர்த்தபடி அவற்றுக்கு நடுவே சுற்றி வரும் போது.

தால் ஏரியின் கரைகளில் அலங்காரப் பட்டு விரித்தது போல அமைந்திருந்த பூங்காவில் தான் படப்பிடிப்பு நடந்தது. நளினாவுக்கும், அவளுடன் நடித்த வாலிபக்கதா நாயகனுக்கும் அந்த இடத்தில் இரண்டு முழு நாட்கள் ஓடியாட வேண்டிய வேலை இருந்தது. ஏரியில் மிதக்கும் நந்தவனம் ஒன்றில் அமர்ந்து அவர்கள் பேசுவது போல ஒருகாட்சி. ஏரியின் நீர்ப்பரப்பில் நீர் விளையாட்டில் கலந்து கொள்வது போல இன்னொரு காட்சி. அது தான் சுந்தரத்துக்குப் பிடிக்கவில்லை. நீச்சல் உடையும், உடல் அழகு தெரியும் தோற்றமுமாக நளினாவை மிக அருகில். வெவ்வேறு கோணங்களில் காமிரா படம் பிடித்த அந்தக் காட்சி...

இரவு நேரம். ஏரியின் நீர்ப்பரப்பு கரு நீலமாகப் படிந்திருந்தது. ஆங்காங்கு வர்ண விளக்குகளுடன் படகு வீடுகள் கூட்டில் அடையும் பறவைகளாய் அமைதியுடன் மிதந்தன. படகில் முன்புறம் மூடிய கண்களுடன் நளினா அமர்ந்திருந்தாள். அருகே சற்றுத்தள்ளி உட்கார்ந்திருந்த சுந்தரத்தின் பார்வை அவள் மீது பதிந்தது.

(வளரும்)

பதிப்பாளரும் ஆசிரியரும்: சு. இராசேந்திரன், எம்.ஏ., 19. நௌரோசி வீதி சென்னை-31. அச்சிடுபவர் : பி. வி. ராமச்சந்திரன், ஸ்ரீ பண்டாரிபிரஸ் 26, பிராட்வே, சென்னை-1.

www.thamizham.net - Free E Books No TM 14718

# SAKTHI SUGARS LIMITED

*Manufacturers of*

HIGH QUALITY WHITE CRYSTAL SUGAR

AND

PRODUCERS OF "SAKTHI" HYBRID SORGHUM,
MAIZE AND BAJRA SEEDS.

*Regd. Office:*

72, SENGUPTA STREET,
RAM NAGAR, COIMBATORE-9

*Factory:*

SAKTHINAGAR P.O.,
ERODE RMS

*Managing Agents:*

M/s. BHAVANI ENTERPRISES,

POLLACHI

www.thamizham.net - Free E Books No.TM 14718




www.thamizham.net - Free E Books No TM 14718